வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.08.2023 புதன்கிழமை | இதழ் : 242 | பக்கங்கள் : 16






நாட்டில் நிலவும் வறட்சியால் நீர்த்தேக்கங்கள் பல வற்றி வருகின்றன, இவ்வாறு நுவரெலியா - மஸ்கெலியா நகருக்கு அண்மையாக வற்றிய நீர்த் தேக்கத்திலிருந்து ஆலயம் ஒன்று வெளிப்பட்டுள்ளது.

# 13ஐ அசல் வடிவில் அமுல்படுத்துங்கள்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்!

கொழும்பு, ஓகஸ்ட் 09

**காணி, பொலிஸ், நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை அதன் அசல் வடிவிலேயே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது பரிந்துரையை முன்மொழிந்துள்ளது.**

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரும் 15ஆம் திகதிக்குள் பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு கட்சிகளை கேட்டிருந்தார். இதற்கிணங்க ரெலோ, புளொட் தலைமையில் இயங்கும் ஐந்து கட்சிகள் கொண்ட தமிழ்த் தேசியக்

15



## 56 மதகுருமார் சிறைகளில்!

கொழும்பு, ஓக. 09

சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்புணர்வு, பண மோசடி, புதையல் தோண்டல் எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புள்ள 56 மத குருமார் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நீதி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை வாய்மூல விடைக்கான வினாக்களின்போது பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

2023 ஜூன் 01 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மாத்திரம் பல்வேறு 56 மதகுருமார்கள் சிறைச்சாலைகளில்

15

## கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வதற்கு அரசு நிதி வழங்கும்

முல்லைத்தீவு, ஓக. 09

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை அகழ்வதற்கான நிதியை அரசாங்கம் வழங்க சம்மதித்துள்ளது என்று காணாமல் போனோர் பணிமனை தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் அண்மையில் மனிதப் புதைகுழி கண்டறியப்பட்டது. இது தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதிவான் ரி. பிரதீபன் முன்னிலையில் எடுக்கப்பட்ட இந்த வழக்கு தொடர்பாக சட்டத்தரணி வி. கே. நிரஞ்சன் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

15

## தீர்வுக்கான கதவுகள் திறந்தேயுள்ளன தமிழ் கட்சிகளே குழப்பத்தில் உள்ளன!

### அமைச்சர் பிரசன்ன சொல்கிறார்

கொழும்பு, ஓக. 09

“தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான கதவுகள் திறந்துள்ளன. ஆனால், தமிழ் கட்சிகள்தான் குழப்பத்தில் உள்ளன. அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அவர்கள் ஒன்றிணைந்து வந்தால்தான் அனைத்துக் கட்சிகளும் இணைந்து மூவின மக்களும் ஏற்கும் தீர்வை வென்றெடுக்க முடியும்.”

- இவ்வாறு ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் குறித்தும், அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பிலும் தமிழ்க் கட்சிகள் வெவ்வேறு நிலைப்பாடுகளுடன்

15

## குருந்தூர்மலையில் சைவர்களுக்கு பாதகமாக இனி நடக்க மாட்டோம்!

### தொல்பொருள் திணைக்களம் நீதிமன்றில் உறுதி

கொழும்பு, ஓக. 09

குருந்தூர்மலையில் சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபட தடை செய்யவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டோம்.

- இவ்வாறு தொல்பொருள் திணைக்களத்தினர் நீதிமன்றில் தெரிவித்தனர் என்று சட்டத்தரணி தனஞ்சயன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் ஆதி ஐயனார் கோயில் பகுதியை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்பட்டது. நீதிமன்ற கட்டளையை மீறி அங்கு கட்டடங்கள் கட்டப்பட்டமை

15

## குடிதண்ணீர் போத்தலை ஒருமுறையே பாவியுங்கள்

கொழும்பு, ஓக. 09



ஒருமுறை மாத்திரமே பயன்படுத்தும் விதமாக தயாரிக்கப்பட்ட போத்தல்களில் மீண்டும் தண்ணீரை நிரப்பிக் குடிக்க வேண்டாம் என்று கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் மருத்துவர் ஜி. விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஒருமுறை பயன்படுத்தப்படும் போத்தல்களில் அதிகூடிய சூரிய ஒளிபட வாய்ப்புள்ளதால் சில இரசாயனங்கள் தண்ணீரில் கலக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்கள் - குறிப்பாக மாணவர்கள் முடிந்தவரை வீட்டில் இருந்து குடிதண்ணீரை எடுத்துச் செல்ல வேண்டும். ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட போத்தல்களில் மீண்டும் நீர் நிரப்பு வதை தவிர்த்து கண்ணாடி அல்லது

15

## 13இல் பொலிஸ் அதிகாரம் இன்று விசேட சந்திப்பு!

கொழும்பு, ஓக. 09

13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பொது பாதுகாப்பு அமைச்சர் ட்ரான்

15

## உள்ளூராட்சி சபைகளை கூட்ட சர்வஜன வாக்கெடுப்பு தேவை!

### அறிவித்தது உயர்நீதிமன்றம்

கொழும்பு, ஓக. 08

உள்ளூராட்சி மன்றங்களை மீளக் கூட்டுவதற்காக முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணையை நடை முறைப்படுத்த 2/3 பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.(ஐ)



## முட்டையின் விலை ரூ. 38ஆக குறையும்!

### அமைச்சர் நளின் பண்டார

கொழும்பு, ஓக. 09

இன்னும் ஒரு வாரத்தில் 38 ரூபாய் வரை முட்டையின் விலை குறைவடையும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும்,

முட்டை இறக்குமதி தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். நாட்டுக்கு தினந்தோறும் தேவைப்படும் முட்டைகளில் தேசிய உற்பத்தியிலிருந்து கொள்வனவு செய்த போதும் மூன்று இலட்சம் முட்டைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இதை தற்போதைய நிலையில் நிவர்த்தி செய்து கொள்ள முடியாத காரணத்தாலேயே நாம் வெளிநாடுகளிலிருந்து முட்டையை இறக்குமதி செய்ய தீர்மானித்தோம்.

நாட்டுக்கு போதுமான அளவில் முட்டையை உற்பத்தி செய்வதற்கு எமக்கு எவ்வளவு காலம்

15

## இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து ஒரு குறுங்கதை ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கதைதான் தனக்கு அடிக்கடி ஞாபகத்துக்கு வருகின்றது என்ற குறிப்புடன்:-

கதையை முதலில் தருகின்றேன். அதற்கு பின்னர் இன்றைய பத்திக்கு வருவோம்.

ஒருமுறை நடைபாதையில் அனுமதி இல்லாமல் வியாபாரம் செய்ததற்காக ஒருவர் மாட்டிக் கொண்டார். அவர் அந்த ஊருக்கு புதிது. அதனால் அங்கு நடைபாதையில் வியாபாரம் செய்ய உரிமம் தேவை என்பது தெரியாது.

அவர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார் - அங்கு நீதிபதி முன் மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் உரிமம் இல்லாமல் விபசாரம் செய்ததால் கைது செய்யப்பட்டிருந்தனர். அந்த ஊரில் விபசாரம் செய்யவும் உரிமம் வழங்கப்படுகிறது. அவர்கள் அத்தகைய உரிமம் இல்லாததால் மாட்டிக்கொண்டனர்.

நீதிபதி முதல் பெண்ணிடம் கேட்டார் ' நீ யார், என்ன செய்து கொண்டிருந்தாய்? இந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா ?'

முதல் பெண் 'நான் ஒரு மொடல், என்னை தவறாகக் கைது செய்துவிட்டனர்' என்று பொய் சொன்னாள்.

நீதிபதி '30 நாள் கடும் காவல் தண்டனை' என்று சொல்லி விட்டு, இரண்டாம் பெண்ணை பார்த்து இதே கேள்விகளை கேட்டார்.

இரண்டாம் பெண் 'நான் ஒரு நடிகை! எனக்கும் இதற்கும் சிறிதளவும் சம்பந்தமில்லை' எனச் சொன்னாள் (பொய்தான்).

நீதிபதி 'உனக்கு 60 நாள் கடும் காவல் தண்டனை' என்று சொல்லிவிட்டு, மூன்றாம் பெண்ணை பார்த்து இதே கேள்விகளை கேட்டார்.

மூன்றாம் பெண் 'ஐயா ! நான் ஒரு விபசாரி. உரிமம் பற்றி எனக்கு தெரியாது, எனக்கு வேறு தொழிலும் தெரியாது!' எனச் சொன்னாள்.

இதைக் கேட்ட நீதிபதி 'நான் உன்னைப் பாராட்டுகிறேன். தண்டனை கிடைக்கும் எனத் தெரிந்தும் உண்மையை சொன்னதற்காக! நான் உன்னை விடுதலை செய்கிறேன். அதுமட்டுமல்ல உனக்கு உரிமம் வழங்கவும் உத்தரவிடுகிறேன்!' எனத் தீர்ப்பு கூறினார்.

இப்போது உரிமம் இல்லாமல் நடைபாதையில் வியாபாரம் செய்தவரின் முறை, நீதிபதி தனது வழக்கமான கேள்விகளை அவரிடம் கேட்டார்.

அதற்கு அவர்: 'ஐயா ! நானும் ஒரு விபசாரி, உரிமம் பற்றி எனக்கு தெரியாது, எனக்கு வேறு தொழிலும் தெரியாது' எனச் சொன்னார்.

இதுதான் நண்பர் அனுப்பி வைத்த அந்தக் கதை.

அது ஏன் அனுப்பப்பட்டது என்பதற்கு சிறிய விளக்கத்தையும் அனுப்பியிருந்தார் நண்பர்.

அண்மையில், சில நாட்களாக பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று பல்வேறு தரப்புகளும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ பொலிஸ் அதிகாரத்தை நீக்கவேண்டும் என்று கூறத் தொடங்கியதும், இப்போது, முழுமையாக அமுல்படுத்துவதை பின்னர் பார்க்கலாம். முதலில் மாகாண சபைகளுக்கு தேர்தலை வையுங்கள் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது.

பதின்மூன்றை அமுல்படுத்துவதிலும், மாகாண சபைகளை இயங்கச் செய்வதிலும் 'ஈழநாடு'ம் தொடர்ந்து மல்லுக்கட்டி வருவதை கடந்த சில மாதங்களாக காணமுடிகின்றது. நல்ல விடயம்தான், பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு கோவணத்தையும் இழந்த கதையாக ஆகிவிடக் கூடாது என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான்.

ஆனால், அதுவல்ல நமது பிரச்னை.

தந்தை டாக்டர் என்றால் பிள்ளைகளும் டாக்டராக வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். சட்டத்தரணியின் பிள்ளைகள் சட்டத்தரணிகள் ஆகவேண்டும் என்று நினைக்கும். இப்படித்தான் நமது சமூகத்தில் பெற்றோர் எந்தத் தொழிலில் இருக்கிறார்களோ அதனையே பிள்ளைகளும் செய்ய விரும்புவது வழமையானதுதான்.

ஆனால், அரசியல்வாதிகளின் பிள்ளைகள் அப்படி நினைத்தாலும் குடும்ப அரசியல் என்று சொல்லத் தொடங்கிவிடுவார்கள் என்பதால் அப்படி தகுதியானவர்கள் இருந்தாலும் அரசியலுக்கு வர விரும்புவதில்லை.

ஆனால், அதற்கு மாறாக அரசியலுக்கு வர விரும்புகின்ற நம்மவர்கள், தங்களுக்கு முன்னர் அரசியல்வாதிகள் எப்படி இருந்தார்களோ- எதைச் செய்தார்களோ அதனையே தாங்களும் செய்தால்தான் தாங்களும் அரசியல்வாதி ஆகலாம் என்று நினைத்து விடுகின்றார்கள்.

அதனால்தானோ என்னவோ, புதிதாக அரசியலுக்கு வருகின்ற இளையவர்களும் தமது அரசியல் 'முன்னோடிகள்'போலவே அரசியல் செய்ய முற்படுவதையே காணமுடிகின்றது.

ஈழநாடு கேட்பதுபோலவோ அல்லது மற்றவர்கள் கேட்பது போலவோ மாகாண சபைகளுக்கு தேர்தல் நடந்தாலும் முன்னர் இருந்த அரசியல்வாதிகளோ அல்லது அவர்கள் அடியொற்றிய அரசியல்வாதிகளோதானே மீண்டும் போட்டியிடப் போகின்றார்கள்.

அப்படியொரு மாகாண சபை ஏற்படுவதைவிட இப்படியே இருந்தால் என்ன?

இதுதான் இந்த நண்பர் மேலேயுள்ள கதையோடு எழுதி அனுப்பியிருந்த கேள்வி.

அவரது கேள்வியும் நியாயமானதுதான்.

நமக்கு முன்னால் எப்படியொரு குற்றவாளி தப்பினாளோ அதேபோல சொன்னால் தானும் தப்பிக்கலாம் என்று நினைத்த அந்த நடைபாதை வியாபாரி போல, அரசியலுக்கு வருகின்றவர்களால் மக்களுக்கு எதையும் செய்யமுடியாது என்ற அவரின் கருத்தை மறுத்துரைக்க முடியவில்லை.

அந்த நண்பர் சொல்ல வருவது, மாகாண சபைகளுக்கு தேர்தல் வையுங்கள் என்று மாத்திரம் கோரிக்கை வைக்காதீர்கள். அப்படி நடந்தால் சரியானவர்கள் கைகளில் மாகாண சபை நிர்வாகமும் செல்லவேண்டும் என்கிறார்.

எதுவோ இன்றைய பத்தியை எழுதிய அந்த நண்பருக்கு நன்றி.

**- ஊர்க்குருவி.**

# பயணிகள் போக்குவரத்து சேவையில் மின்சார பஸ்களை இணைக்க திட்டம்

கொழும்பு, ஒக. 09

2024 ஆம் ஆண்டளவில் இலங்கையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் மின்சார பஸ்களை இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அடிப்படை நடவடிக்கைகள் அடுத்த சில மாதங்களில் முன்னெடுக்கப்படுமென அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர், போக்குவரத்து அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே போக்குவரத்து துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையின் பொதுப் போக்குவரத்துத் துறையில் நீண்ட காலமாக நிலவும் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்கி, தேசிய போக்குவரத்துக்கு கொள்கையொன்றை அறிமுகப்படுத்தவும் பொதுப் போக்குவரத்து சேவையில் ஒருங்கிணைந்த நேர அட்டவனைகள் மற்றும் இலத்திரனியல் பயணச்சீட்டுகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், முகாமைத்துவப் பிரச்னைகள் மற்றும் பயணிகள் போக்குவரத்துத் துறையில் உள்ள திறமையின்மை காரணமாக பயணிகள் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயணிகள் போக்குவரத்துத் துறையின் தரத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

பயணிகள் பயணச்சீட்டு கொள்வனவு தொடர்பில் அனைத்து தரப்பினரும் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தவிர்க்கும் வகையில் இணைய பற்றுச்சீட்டு முறைமை முன்மொழியப்பட்டுள்ளதாகவும், இதற்காக நிதி அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

(அ)

## ஆளுநரை இன்று சந்திக்க முடியாது

யாழ்ப்பாணம், ஒக. 09

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் ஆளுநர் செயலகத்துக்கு இன்றைய தினம் வருகை தரமாட்டார்.

எனவே, பொதுமக்கள் இன்றைய தினம் ஆளுநரை சந்திக்க முடியாது என்று ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## அதிகாரியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டுவீச்சு!

தென்மராட்சி, ஒக. 09

சாவகச்சேரி மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரியின் வீட்டின் மீது பெற்றோல் குண்டுவீச்சு நடத்தப்பட்டுள்ளது.

கருகம்பனையில் உள்ள அதிகாரியின் வீட்டுக்கு நேற்று முன்தினம் 3 மோட்டார் சைக்கிள்களில் சென்ற 6 பேர் கொண்ட குழு, வீட்டின் கதவை கொத்தி உடைக்க முற்பட்டதுடன் யன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்து விட்டு, யன்னல் ஊடாக பெற்றோல் குண்டை வீட்டினுள் வீசி விட்டு தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

*தினேஷ் ஷாப்டர் கொலை வழக்கு:*

# நிபுணர் குழுவின் அறிக்கையின் பின்னர் மரணத்துக்கான காரணம் அறிவிக்கப்படும்!

கொழும்பு, ஒக. 09

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள மருத்துவ நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் மரணத்துக்கான காரணங்கள் தொடர்பான முடிவை அறிவிக்கவுள்ளதாக கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திரா ஜயசூரிய நேற்று திறந்த நீதிமன்றத்தில் அறிவித்தார்

குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதிவான் இதனைத் தெரிவித்தார்.

மீண்டுமொரு சுற்று கலந்துரையாடலை நடத்துவது அவசியம் என சம்பந்தப்பட்ட மருத்துவ நிபுணர் குழு தமக்கு அறிவித்துள்ளதாகவும் நீதிவான் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, விசாரணை தொடர்பான மரபணு அறிக்கை எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்தார்.

இதன்படி, அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நீதிவான் அறிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மாணவன் படுகொலை; ஏழு பேர் கைதாகினர்!

கொழும்பு, ஒக. 09

உறவினர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் பாடசாலை மாணவன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

குருநாகல், பண்டவஸ்நுவரை மேற்கு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த மாணவனின் வீட்டுக்கு முன்னால் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. கத்தியால் குத்தப்பட்ட மாணவன் படுகாயமடைந்தார். இதைத் தொடர்ந்து அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் வழியிலேயே உயிரிழந்தார்.

இதில், உயர்தரத்தில் கல்வி கற்கும் ஆர். டி. அனுரப்பிரிய தர்ஷன (வயது 18) என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 7 பேரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## பெண்கள் துஷ்பிரயோகம்; நவகமுவவில் தேரர் கைது!

கொழும்பு, ஒக. 09

கொழும்பு - நவகமுவவில் வீடு ஒன்றில் விகாரையை நடத்தி வந்த பல்லேகம சுமண என்ற தேரர் நேற்று கைது செய்யப்பட்டாரென நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியை சேர்ந்த சில பெண்களை துஷ்பிரயோகம் செய்தார் என்று அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தத் தேரர் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி அந்த வீட்டில் தாய் மற்றும் மகளுடன் ஒன்றாக இருந்த நிலையில் அந்தப் பிரதேச மக்களால் இந்தப் பிக்கு தாக்கப்பட்டிருந்தார். இது தொடர்பான விடயங்கள் சமூக வலைத் தளங்களில் பெரும் பேசு பொருளாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
09.08.2023 புதன்கிழமை

சோபகிருது வருடம், ஆடி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மக்கள் அணிதிரள வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஐந்து கட்சிகள் கூட்டாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பியிருக்கின்றன. மாகாண சபையின் அதிகாரங்கள் தொடர்பில் தங்களின் நிலைப்பாட்டை தெரிவித்திருக்கின்றனர். அதாவது, 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து ஏற்கனவே எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் கையளிப்பதுடன் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள அனைத்து அதிகாரங்களும் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென்றும் குறித்த கடிதத்தில் கோரப்பட்டிருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பரிந்துரைகளை கோரியிருக்கும் நிலையிலேயே கூட்டமைப்பு தங்களின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியிருக்கின்றது. அந்த வகையில் கூட்டமைப்பின் ஐந்து கட்சிகள் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தெளிவாகவும் சரியாகவும் தங்களின் நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றன.

ஆனால், இந்த நடவடிக்கை மட்டும் போதுமானதா? இந்தியாவை நோக்கி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. தற்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தங்களின் நிலைப்பாடுகளை முன்வைத்திருக்கின்றனர். ஆனால், இந்த விடயம் தொடர்பில் ஜனநாயக ரீதியில் மக்களை அணி திரட்டும் நடவடிக்கைகளை கூட்டமைப்பினர் இதுவரையில் முன்னெடுக்கவில்லை.

மக்கள் மத்தியிலிருந்தும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்துக்கான ஆதரவுக் குரல்கள் வெளியில் வரவேண்டும். அண்மைக்காலத்தில் மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்பு மட்டுமே இது தொடர்பில் பொது வெளியில் பேசியிருக்கின்றது. இந்த விடயத்தில் மக்களை அணிதிரட்ட வேண்டிய தமிழ்த் தேசிய கட்சிகள் அமைதியாக இருக்கின்றன. மக்களும் இந்த விடயத்தில் அக்கறையாக இருக்கின்றனர் என்னும் செய்தி வெளிக்காட்டப்படும் போதுதான் இந்தியாவும் இந்த விடயத்தில் கூடுதல் கரிசனையை காண்பிக்கும்.

13ஆவது திருத்தச்சட்டம் இறுதித் தீர்வல்ல - ஆனால், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு கடந்த 36 வருடங்களாக நடைமுறையில் இருக்கின்ற விடயத்தில் தென்னிலங்கையின் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு அமைவாக முடிவுகள் எடுக்கப்படுவதற்கு எதிராக மக்களுடன் இணைந்து தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களின் எதிர்ப்பை பதிவுசெய்ய வேண்டும். 13இல் எந்த வெட்டிக்குறைப்புச் செய்வதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் - என்னும் நிலைப்பாட்டை ஜனநாயக ரீதியில் முன்வைக்க வேண்டும்.

அதனையும் மீறி ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கை கட்சிகளோடு இணைந்து 13இலுள்ள விடயங்களை அகற்றுவாராயின் அவரை ஜனாதிபதி தேர்தலில் நிராகரிக்கும் முடிவை தமிழ் மக்கள் எடுப்பார்கள் என்னும் செய்தியை பொதுவெளியில் முன்வைக்க வேண்டும். ஏனெனில், இப்போது புதிய விடயங்கள் தொடர்பில் எவரும் பேசவில்லை - மாறாக, அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை அமுல்படுத்துவது தொடர்பிலேயே பேசப்படுகின்றது. இந்த விடயத்தில் அனைத்து கட்சிகளும் ஓரணியில் நிற்க வேண்டும். அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தை முன்வைக்க வேண்டும். அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் அவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறி மக்களுடன் நிற்க வேண்டும்.

# 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த பாராளுமன்றின் அனுமதி தேவையில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

*கொழும்பு, ஓக. 09*

*அரசமைப்பின் முக்கிய திருத்தமாக உள்ள 13ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு கிடையாது. பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து ஏனைய அம்சங்களை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டு கொண்டு ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முரண்பட்டதாக உள்ளன என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.*

*நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் திங்கட்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*13 ஆவது திருத்தத்தின் பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து ஏனைய அம்சங்களை முழுமையாக அமுல்படுத்த பாராளுமன்றத்தின் அனுமதி மற்றும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சிக்கிறார்.*

*அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் முக்கியமானதொரு திருத்தமாகும். இந்த திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத் துறைக்கு பொறுப்பாக்குவது ஏற்றுக்கொள்ள கூடியதொரு செயல்பாடல்ல.*

*13 ஆவது திருத்த அமுலாக்கம் குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு கிடையாது. நாட்டின் அரசியலமைப்பின் பிரதான பேசுபொருளாக உள்ள 13 ஆவது திருத்த விவகாரத்தில் சட்டவாக்கத்துறை, நீதித்துறை , நிர்வாகத்துறை என முத்துறைகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.*

*13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி முன்னெடுக்கும் செயற்பாடுகள் முரண்பட்டதாக உள்ளன.*

*கடந்த மாதம் இடம்பெற்ற சர்வக்கட்சி மாநாட்டில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவினர் உறுதியாக குறிப்பிட்டார்கள்.*

*சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.*

*பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியால் செயல்பட முடியாது. 13ஆவது திருத்தம் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது. புதிய தலைமைத்துவத்தின் ஊடாகவே இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இதற்கு மக்களால் பலமான அரசாங்கம் ஒன்று வெகுவிரைவில் தோற்றுவிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)*

# பிள்ளைகளுடன் நேரத்தை பெறுமதியாக செலவிடுங்கள்

## சச்சின் டெண்டுல்கர் அறிவுறுத்து

*கொழும்பு, ஓக. 09*

*பிள்ளைகளுடன் நேரத்தை பெறுமதியாக செலவிடுவதுடன் கல்வி மற்றும் ஊட்டச்சத்தில் பிள்ளைகளுக்கு முதலீடு செய்வதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தில் மட்டுமல்லாது ஒவ்வொரு நாட்டினது எதிர்காலத்திலும் நாம் முதலீடு செய்கின்றோம் என்று இந்திய கிரிக்கெட் ஜாம்பவானும் யுனிசெவ் அமைப்பின் தெற்காசியப் பிரதந்தியத்திற்கான நல்லெண்ணத் தூதுவருமான சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.*

*பாடசாலை மாணவர்கள் மிகுந்த மன உறுதியுடன் இருப்பதுடன் சிறந்த எதிர்காலத்துக்கான அவர்களின் நம்பிக்கையும் வலுவாகக் காணப்படுகின்றது. அவர்கள் தங்களது இலக்குகளை அடைவதற்கு தொடர்ந்தும் நாம் உதவ வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.*

*யுனிசெவ்வின் தெற்காசியப் பிரதந்தியத்திற்கான நல்லெண்ணத் தூதுவர் என்ற ரீதியில் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.*

*இந்நிலையில், அவர் சப்ரகமுவ மாகாணத்தில் யுனிசெவ் அமைப்பால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டத்தை பார்வையிட்டார். அத்துடன் அங்குள்ள சில பாடசாலைகளுக்கு சென்ற சச்சின் டெண்டுல்கர், பெருந்தோட்டத்துறைப் பகுதிகளில் வாழும் மக்களையும் சந்தித்து அவர்களின் குறைநிறைகளை கேட்டறிந்துகொண்டார்.*

*இதன் பின்னர், செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)*

# கசிப்புடன் பெண் கைது!

*யாழ்ப்பாணம், ஓக. 09*

*மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, சங்கானை தேவாலய வீதி பகுதியில் கசிப்பு மற்றும் கோடா என்பவற்றுடன் 41 வயதுப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*அவரிடம் இருந்து 5 லீற்றர் கசிப்பு மற்றும் 20 லீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டுள்ளன. குறித்த பெண் முன்னரும் ஒரு தடவை கசிப்புடன் கைதாகிப் பின்னர் விடுவிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.*

*கைது செய்யப்பட்ட பெண்ணை, மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும். புது அத்தியோயம் தொடங்கும் நாள்.

**இடபம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**கடகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும்.

**சிம்மம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் தகுந்த முடிவுகள் எடுப்பீர்கள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பொறுமை தேவைப்படும்.

**விருட்சிகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**மகரம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

# இலங்கையில் 13ஐ அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## தி. மு. க. குற்றச்சாட்டு

புதுடில்லி, ஓக. 09

இலங்கையில் அரசியல் சட்டத்தில் உள்ள 13ஆவது சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த செய்வதில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை - என்று திமுக எம்பி டி.ஆர். பாலு குற்றஞ்சாட்டியுள்ளார்.

மக்களவையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பாராளுமன்றத்துக்கு பிரதமர் நரேந்திர மோடியை வர வைக்க வேறு வழி இல்லாததால் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்துள்ளோம்.

160 ஆண்டு கனவுத் திட்டமான சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை பா. ஜ. க. அரசு கிடப்பில் போட்டது ஏன்? காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதால் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

இலங்கை அரசிடம் இருந்து கச்சதீவை மீட்பதில் பா. ஜ. க. அரசு தோல்வி அடைந்துவிட்டது. இலங்கை அரசியல் சட்டத்தில் 13-வது சட்டத் திருத்தத்தை அமல்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை - என்றார். (ஐ)

**கோவை குண்டுவெடிப்பு:**

# சந்தேகத்தில் கைதானவர் ஆயுத பயிற்சி பெற்றவராம்!

சென்னை, ஓக. 09

கோவை கோட்டை ஈஸ்வரன் கோவில் முன்பாக கடந்த ஆண்டு ஒக்ரோபர் 23ஆம் திகதி அதிகாலை கார் குண்டு வெடிப்பு நடந்தது. இதில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய ஜமேஷா முபின் உயிரிழந்தார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில் வழக்கு என்.ஐ.ஏ.வுக்கு மாற்றப்பட்டது.

என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தி ஜமேஷா முபினின் கூட்டாளிகள் 11 பேரை கைது செய்தனர். அவர்களிடம் தனித்தனியாக விசாரணை நடத்தி, சமீபத்தில் என்.ஐ.ஏ. நீதிமன்றில் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்தது.

இந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு கோவை கார் குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்புடையதாக கோவை உக்கடம் ஜி.எம்.நகரை சேர்ந்த முகமது இத்ரிஸ் (வயது 25) கைது செய்யப்பட்டார். அவர் ஜமேஷா முபினின் நெருங்கிய கூட்டாளி என்று அறிய வந்தது. மேலும் இவர் இந்து கோவில்களை தகர்ப்பது, இந்து தலைவர்களை கொலை செய்யும் சதி திட்டத்துடன் செயல்பட்டது தெரியவந்தது. அத்துடன், இவர் கேரளாவில் ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்றும் அறிய வந்துள்ளது. (ஐ)

# செந்தில் பாலாஜியிடம் தொடர்ந்து விசாரணை

சென்னை, ஓக. 09

சாஸ்திரி பவனில் நள்ளிரவு ஒரு மணி வரை நடைபெற்ற விசாரணையை தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் நேற்றுக் காலை மீண்டும் விசாரணை தொடங்கியது.

சட்டவிரோத பண பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜியை விடுவிக்க கோரி அவரின் மனைவி மேகலா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், செந்தில் பாலாஜி கைது சரியானது எனவும், அவரை காவலில் வைத்து விசாரிக்க வருவாய்த் துறைக்கு அனுமதியளித்தும் தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து மேகலா தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம், 5 நாட்கள் செந்தில் பாலாஜியை காவலில் வைத்து விசாரிக்க வருவாய்த் துறைக்கு அனுமதியளித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது. இதை தொடர்ந்து, அமைச்சர் செந்தில் பாலாஜியை காவலில் எடுக்க கோரி வருவாய்த் துறை தரப்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் இரவு 9.10 மணிக்கு புழல் சிறையிலிருந்து அமைச்சர் செந்தில் பாலாஜி சாஸ்திரி பவனுக்கு அழைத்து வரப்பட்டார். அங்குள்ள 3ஆவது மாடியில் உள்ள வருவாய்த் துறை பணிமனையில் வருவாய்த்துறை அதிகாரிகள் விசாரணையை தொடங்கினர்.

ஒவ்வொரு நாளும் 50 கேள்விகள் என்ற அடிப்படையில் செந்தில் பாலாஜியிடம் விசாரணை நடத்தி அவரின் தரப்பு பதிலை பதிவு செய்ய வருவாய்த் துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். அமலாக்கத்துறை விசாரணை நடப்பதால் சாஸ்திரி பவன் வளாகத்தை சுற்றிலும் மத்திய பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

செந்தில் பாலாஜிக்கு திடீரென உடல்நல குறைவு ஏற்பட்டால் அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல தயார் நிலையில் அம்புலன்ஸும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று காலை அவரிடம் மீண்டும் விசாரணை ஆரம்பமானது. (ஐ)

# ஆடை சுதந்திரம் இருக்கலாம் ஆனால் எல்லை மீறக்கூடாது!

## குஷ்பு தெரிவிப்பு

கோவை, ஓக. 09

ஆடையை இப்படித்தான் அணிய வேண்டும். இப்படி அணியக்கூடாது என யாரும் சொல்லவில்லை. ஆடை சுதந்திரம் இருக்கலாம். ஆனால், நமக்கு எல்லை எது என்பது தெரியும். அந்த எல்லையை மீறி சென்று விட வேண்டாம் -என்று தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு தெரிவித்தார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர், குஷ்பு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கருணாநிதி எனது ஆசான் என்று சொல்லிக்கொள்ளவதில் நான் பெருமைப்படுகிறேன். அவர் குறித்து பேச வேண்டுமென்றால், நான் நாள் முழுக்க பேசிக் கொண்டே இருப்பேன். தி. மு. கவில் இருந்து வந்தவள் நான். அதனால் அவர் குறித்து நன்றாகவே எனக்குத் தெரியும்.

கைத்தறியை நிச்சயம் ஊக்குவிக்க வேண்டும். அது நமது கலாசாரத்திலேயே உள்ளது. ஆடையை இப்படித்தான் அணிய வேண்டும். இப்படி அணியக்கூடாது என யாரும் சொல்லவில்லை. ஆடை சுதந்திரம் இருக்கலாம். ஆனால், நமக்கு எல்லை எது என்பது தெரியும். அந்த எல்லையை மீறி சென்றுவிட வேண்டாம். இல்லையெனில், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். மனிதர்களுக்கு ஆறாவது அறிவு என்று உள்ளது. எல்லை தெரிந்து ஆடை அணிய வேண்டும். மேற்கத்திய உடைகளை அணிய வேண்டாம் என்று யாரையும் நான் சொல்லவில்லை. ஆனால், நமது கலாசாரத்தை மறந்துவிட வேண்டாம் - என்றார். (ஐ)

# சர்வகட்சி மாநாட்டை நடத்தி ரணில் மக்களை முட்டாளாக்கவே முயற்சி!

## ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 09

**13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ஆளும் தரப்புக்குள்ளேயே இணக்கப்பாடு ஏற்படாத நிலையில், சர்வகட்சி மாநாட்டை நடத்தி மக்களை முட்டாளாக்கவே ஜனாதிபதி முற்படுகிறார் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

**கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவர், மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஏதேனும் யோசனைகள் இருந்தால், இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அரசியல் கட்சிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது அர்த்தமற்ற ஒரு செயற்பாடாகும். மக்களை முட்டாளாக்கும் ஒரு விடயமே இது. நாம் எப்படி யோசனைகளை முன்வைக்க முடியும்?

சர்வகட்சி மாநாடு நடைபெற்றபோது, பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம், 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ஒத்துழைக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்னர் இருந்த 7 ஜனாதிபதிகளால் இதனை செய்ய முடியாமல் போனது. இதற்கான காரணத்தை முதலில் கண்டறிய வேண்டும்.

மக்கள் ஆணை உள்ள ஜனாதிபதிகளாலேயே இதனை செய்ய முடியாவிட்டால், மக்கள் ஆணை இல்லாத ஒரு ஜனாதிபதியால் எப்படி செய்ய முடியும்?

அத்தோடு, பொதுஜன பெரமுனவுக்குத்தான் பாராளுமன்றில் பெரும்பான்மை பலம் உள்ளது.

அந்தக் கட்சிக்கு இதில் உடன்பாடு இல்லை எனும்போது அரசாங்கம் இந்த செயற்பாட்டை எப்படி மேற்கொள்ளும்?

இந்த நிலையில், எமது யோசனைகளும் கோரப்பட்டுள்ளன.

யாரை ஏமாற்ற இதனை செய்யவேண்டும்? இந்த செயற்பாட்டை வெற்றிகரமாக ஆரம்பிக்கும் முன்னர், அரசாங்கத்திற்குள் இணக்கப்பாடு ஏற்படவேண்டும்.

மாகாணசபைகள் அனைத்தும் இன்று செயலழந்துள்ளன. இதன் அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதிக்கு கீழ் வந்துள்ளன.

அதிகாரங்கள் பகிரப்படவேண்டுமெனில் முதலில் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால்,



இப்போதைக்கு தேர்தல் நடத்தப்படமாட்டாது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இருக்கும்போது, மக்களை முட்டாளாக்கும் வகையில்தான் ஜனாதிபதி இந்த செயற்பாட்டை மேற்கொள்கிறார்-என்றார். (அ)

# அரசாங்க வைத்தியசாலைகளில் இன்சுலின் மருந்துக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 09

அரச வைத்தியசாலைகளில் இன்சுலின் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக நோயாளர்கள் அவற்றைப் பணம் செலுத்தி கொள்வனவு செய்ய வேண்டியேற் பட்டுள்ளது.

மிகக் குறைந்தளவானவர்களுக்கு மாத்திரமே இன்சுலின் மருந்தை பணம் செலுத்தி பெறுக்கொள்ளக்கூடிய இயலுமை காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

அதன் காரணமாக நீரிழிவு நோய் அதிகரித்து, நோயாளர்களின் நோய் நிலைமை அதிகரித்துள்ளதாக வைத்தியர் சமில் விஜேசிங்க குறிப்பிட்டார். (அ)

# 40 ஆயிரத்துக்கும் அதிகமான போலி வைத்தியர்கள் நாட்டில்

கொழும்பு, ஓக. 09

நாடு முழுவதும், 40 ஆயிரத்துக்கும் அதிகமான போலி வைத்தியர்கள் உள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

பல பிரிவுகளை பிரதிநிதித்துவப்படும் அவர்கள் எந்தவொரு தகைமையும் இன்றி, நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதாக அதன் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இது பெரும் பாரதூரமான விடயமாகும் என அவர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பில், பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதாகவும் வைத்தியர் சமில் விஜேசிங்க குறிப்பிட்டார். (அ)



# மத்திய வங்கி வளாகத்துக்குள் புகுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது!

கொழும்பு, ஓக. 09

குத்தகை மற்றும் கடன் செலுத்துவோர் சங்கத்தின் உறுப்பினர்கள் குழுவொன்று இலங்கை மத்திய வங்கியின் வளாகத்திற்குள் பலவந்தமாக பிரவேசித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ் ஒன்றில் ஏறி மத்திய வங்கிக்கு முன்பாக வந்த இந்தக் குழுவினர் மத்திய வங்கி வளாகத்திற்குள் பிரவேசித்தனர்.

இவ்வாறு வந்த குழுவினர் மத்திய வங்கிக்கு முன்பாக அமர்ந்து, வைப்பாளர்களின் வட்டி 8 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ள நிலையில், குத்தகைக்கு அறவிடப்படும் வட்டி 27 வீதமாகவே தொடர்வதாகக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நியாயமற்ற வட்டி வீதத்தை குறைப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதிகளை வழங்கியபோதிலும், அந்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

பின்னர் பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

# இந்திய மீனவர்கள் 10 பேர் கைது!

முல்லைத்தீவு, ஓக. 09

நாயாறு கடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய டோலர் மீன்பிடி படகில் இருந்த 10 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு கடல் பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை 2 மணியளவில் திருகோணமலை கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்கு இடமான முறையில் நாயாறு கடற்பகுதியில் ட்ரோலர் மீன்பிடி படகு ஒன்றை அவதானித்தனர்.

குறித்த படகில் இருந்தோரிடம் விசாரணை செய்தபோது அவர்கள் இந்தியாவில் இருந்து மீன்பிடிக்க வந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து அவர்களைக் கடற்படையினர் கைது செய்தனர்.

# அப்பா கணினியை விற்று குடித்துவிட்டார்

## 10 வயது சிறுமி முறைப்பாடு; மீட்டுக் கொடுத்த பொலிஸார்



கொழும்பு, ஓக. 09

இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய சிறுமி ஒருவரின் கல்விக்காக பயன்படுத்தப்பட்ட கணனியை அவரது குடிகார தந்தை சாராயம் வாங்குவதற்காக விற்பனை செய்துள்ளார்.

எவ்வாறாயினும், இங்கிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமைப் பரிசோதகர் வசந்த சந்திரலாலின் தலையீட்டால், அது கண்டுபிடிக்கப்பட்டு சிறுமியிடம் ஒப்படைக்கப்பட்டது.

சில நாட்களின் முன்னர் இங்கிரிய பொலிஸ் பொறுப்பதிகாரி தனது அலுவலகத்தில் இருக்கும் போது, தொலைபேசி ஒலித்தது. அவர் பதிலளித்தபோது, மறுமுனையில் ஒரு சிறுமியின் குரல் கேட்டது.

“பொலிஸ் மாமா, அப்பா என் கொம்ப்யூட்டரை எடுத்து யாருக்கோ விற்று குடித்துவிட்டு இப்போது தூங்குகிறார். மாமா எனது கொம்ப்யூட்டரை கண்டு பிடியுங்க” என்று அழுதுள்ளார்.

பொலிஸ் பொறுப்பதிகாரி முறைப்பாட்டை கவனமாகக் கேட்டுவிட்டு, “மகளே, அழாதே, நான் எப்படியாவது கண்டுபிடித்து விடுவேன், உன் வீடு எங்கே என்று சொல்லு. நான் இப்போது உன் வீட்டுக்கு வருகிறேன்” என சிறுமியிடம் முகவரியை வாங்கிக் கொண்டார்.

மேலும் 2 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் அழைத்துக் கொண்டு பொறுப்பதிகாரி உடனடியாக சிறுமியின் வீட்டுக்குச் சென்றார். அங்கு முதற்கட்ட விசாரணையில், சிறுமியின் தாய் வெளிநாட்டில் இருப்பதையும், சிறுமி தனது பாட்டியின் பராமரிப்பில் இருப்பதும் தெரிய வந்தது.

பின்னர், சிறுமியின் புகாரின் படி, வீட்டில் ஏற்கனவே தூங்கிக் கொண்டிருந்த சிறுமியின் தந்தையை அழைத்து, கணினி குறித்து கேட்டுள்ளார். அப்போது அவர் கணினியை ஒருவரிடம் 3,500 ரூபாய்க்கு விற்பனை செய்து, அந்தப் பணத்தில் மது அருந்தியது தெரிய வந்தது.

இதன்படி, பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் குழுவினர் கணினி விற்பனை செய்யப்பட்ட வீட்டைத் தேடிச் சென்றதுடன், 3,500 ரூபாய்க்கு வாங்கிய கணினி தொடர்பில் விசாரணை நடத்தியுள்ளனர். பிறருடைய சொத்தை வாங்கும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்றும், ஒரு நபர் எதையாவது மிகக் குறைந்த விலைக்கு விற்கும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் கணினியை வாங்கியவரை எச்சரித்து, கணினியை பொலிஸார் கைப்பற்றினர்.

பின்னர் சிறுமி, அவரது பாட்டி மற்றும் கணினியை விற்ற அவரது தந்தை ஆகியோரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

தன் ஒரே குழந்தையை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவே அவரது மனைவி தொலைதூர நாட்டுக்குச் சென்று, இரவு பகலாக உழைத்துக் கொண்டிருப்பதாகவும், தந்தையான நீங்கள் செய்வது குழந்தையை வருத்தப்படுத்துவதும், அப்பாவுக்குப் பொருந்தாத, நாகரீக சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படாத கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவதுமாகும் என பொலிஸ் பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டினார்.

மேலும், ‘அப்பா’ என்ற வார்த்தை உங்களைப் போன்றவர்களுக்கு பொருந்தாது என்றும், இனிமேல் இதுபோன்று செயல்பட்டால் சட்டப்படி தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார். (அ)

# எவருக்கும் அஞ்சவேண்டிய அவசியம் எமக்கு இல்லை!

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர

கொழும்பு, ஓக. 09

**தற்போது இருக்கும் வறட்சி நிலைமையால் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டால் நாம் எவருக்கும் அஞ்சாமல் அதனை மேற்கொள்வோம் என எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர குறிப்பிட்டார்.**

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமனல வாவியிலிருந்து மின்சாரத்துக்கு நீரை வழங்குவதானது அவசர கொள்வனவிற்காக அல்ல.

அதை தடுக்கவே நாம் இவ்வளவு காலம் நீரை முகாமைத்துவம் செய்து நீரை வழங்கி வருகிறோம்.

ஜூலை 30 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சு நீர்முகாமைத்துவ திணைக்களத்திடம் கேட்டுக் கொண்டமைக்கு இணங்க, நாம் அதிகளவு நீரை வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

ஒக்ரோபர் 15 ஆம் திகதிவரை எந்தப் பிரச்சனையும் இல்லாமல்



மின்சாரத்தை வழங்க முடியும். மின்சாரத்தை கொள்வனவு செய்யவேண்டிய தேவையும் கிடையாது.

மார்ச் மாதம் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யுமாறு மின்சார சபை தெரிவித்தது. ஆனால், நாம் மாற்று வழிகளை கையாளுமாறு வலியுறுத்தியிருந்தோம்.

அதற்கு இணங்க 10 மெகாவோட் டீசல் ஜெனரேற்றரை மத்துகமவிலும், 30 மெகாவோட் ஜெனரேற்றரை அம்பாந்தோட்டையிலும் பொருத்தி, தற்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு மாதத்திற்கு முன்னர் மின்சார சபைக்கு நீர்ப்பற்றாக்குறை பிரச்னை இருப்பதாக நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்திருந்தது.

தற்போது இருக்கும் வரட்சி நிலைமை காரணத்தினால் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால் நாம் எவருக்கும் அஞ்சாமல் அதனை மேற்கொள்வோம்.

யார் என்ன சொன்னாலும் மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்க அரசாங்கம் எந்த தயக்கத்தையும் காட்டாது -என்றார்.

(அ)

## இ-ரிக்கெற் முறையை அறிமுகப்படுத்த நிதியமைச்சு அனுமதி அளித்தது!



கொழும்பு, ஓக. 09

பொது போக்குவரத்து சேவைகளில் இ-ரிக்கெற் முறையை அறிமுகப்படுத்துவதற்கு நிதியமைச்சு அனுமதியளித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஏழு தேசிய பேருந்து சங்கங்கள் இதுவரை இணக்கம் தெரிவித்துள்ளன. மாகாண மட்டத்திலும் இது தொடர்பில் விரைவில் கருத்துகள் பெறப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

## போதியளவு அரிசி கையிருப்பில் உண்டு

கொழும்பு, ஓக. 09

தம்மிடம் போதுமான அளவு அரிசி கையிருப்பில் உள்ளதாக பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, நுகர்வோர் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர்கள் குறிப்பிட்டனர்.

நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக எதிர்காலத்தில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என சில தரப்பினர் அச்சம் வெளியிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், தம்மிடம் போதுமான அளவு அரிசி கையிருப்பில் உள்ளதாக ஐக்கிய அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் வீ.கே ரஞ்சித் தெரிவித்தார்.

எதிர்வரும் 6 மாதங்களுக்கு தேவையான அரிசி கையிருப்பில் உள்ளதாக அவர் கூறினார்.

நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்பாலான பகுதிகளில், நீர் உள்ளதுடன், 6 மாதங்களின் பின்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில், ஆராய முடியும் எனவும் ஐக்கிய அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் வீ.கே ரஞ்சித் தெரிவித்தார்.

(அ)

## யாழ்ப்பாணத்தில் கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட லட்சுமி நாணயங்கள் கண்டுபிடிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாணம் கந்தரோடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சியில் கி.பி. 1ஆம் மற்றும் கி.பி 3ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட லட்சுமி நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் தொல்பொருள் நிறுவனத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான ஆராய்ச்சி இணைப்பாளர், இலங்கையின் புதிய கூட்டு திட்ட இணைப்பாளர் கலாநிதி அரெய்ன் டி சாக்சே, கலாநிதி நிமல்பெரேரா, இலங்கை தொல்பொருள் திணைக்கள முன்னாள் உதவிப்பணிப்பாளர், யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட தரப்பினர் இணைந்து கடந்த ஒரு மாதகாலமாக கந்தரோடையில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் போது , கி.பி. 1ஆம் - கி.பி. 3ஆம் நூற்றாண்டு காலப் பகுதிக்கு இடைப்பட்டதாக கருதப்படும் ஐந்து லட்சுமி நாணயங்களை மீட்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

1917ஆம் ஆண்டு கந்தரோடை பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்ட "போல் பீரிஸ்" நாணயங்கள் சிலவற்றை கண்டுபிடித்த போது, அவற்றில் பெண்ணொருவர் தாமரை மலர் மீது நிற்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டதை ஆதாரமாக காட்டி, அதற்கு லட்சுமி நாணயம் என பெயர் வைத்தார்.

இந்தப் பின்புலத்தில் மீண்டும் கந்தரோடையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதல்கட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகளிலேயே இந்த நாயணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

(அ)

# யாழில் முற்றிலும் இலவச கண்புரை சத்திரசிகிச்சை!

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சையை யாழ்.போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவர்களுக்கான சத்திரசிகிச்சைகள் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவனின் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 12 ஆம் சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று உடுவில் பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 12 ஆம் சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் இணுவில் ஆரம்ப சுகாதார மருத்துவ பிரிவிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திர சிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும், சத்திர சிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(அ)

# சீனன்குடா விபத்தில் பலியான விமானி முன்னரும் விபத்தில் சிக்கி தப்பியவர்!

கொழும்பு, ஓக. 09

திருகோணமலை சீனன்குடாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விமான விபத்தின்போது உயிரிழந்த விமானி 2012 இல் பாரிய விபத்தில் மயிரிழையில் உயிர் தப்பியவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

சீனன்குடாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விபத்தில் சிக்கி உயிரிழந்த பிடி- 6 பயிற்சி விமானத்தின் விமானி தரிந்து ஹேரத் 2012 இல் தும்மலசூரிய என்ற இடத்தில் மயிரிழையில் உயிர் தப்பினார்.

2012 பெப்ரவரி 13ஆம் திகதி அவரது மிக் 27 போர் விமானம் தென்னந்தோப்பில் விபத்துக் குள்ளானவேளை இவர் பரசூட்டை பயன்படுத்தி விமானத்திலிருந்து தப்பினார்.

பயிற்சியின்போதே இந்த விபத்தும் இடம்பெற்றது.

குருநாகல் மலியதேவ கல்லூரியின் மாணவனான இவர் 2006 இல் இலங்கை விமானப் படையில் இணைந்தார் என்று விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ)

# விமான விபத்துகள் தொடர்பில் அரசே பொறுப்பு கூறவேண்டும்

## சபையில் தயாசிறி ஜயசேகர கோரிக்கை



**கொழும்பு, ஓக. 09**
**அருங்காட்சியகத்தில் வைக்கப்படவேண்டிய விமானங்களைப் பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதே உயிரிழப்புக்களுக்கு காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

இதற்கு யார் பொறுப்பு என்பதை அரசாங்கம் கூறவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று (நேற்று முன் தினம் ) விமான விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளார்கள். விபத்துக்குள்ளான விமானம் 1958 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

விமானத்தின் இயந்திரம், 1961 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனை நிர்மாணிக்கும்போது நாம் பிறந்து கூட இருக்கவில்லை.

பி.டி. 6 எனும் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 6 விமானங்கள், விமானிகளின் பயிற்சிக்காக இன்னமும் பயன்படுத்தப்படுகிறது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான வின் கொமாண்டர் தரிந்து ஹேரத் எனும் விமானப் பயிற்சி ஆலோசகரும், அளவ்வ பகுதியைச் சேர்ந்த பயிற்சி விமானியான பெசான் வர்ணசூரிய எனும் இளைஞனும் விபத்தில் உயிரிழந்துள்ளார்கள்.

இவர்களின் மரணத்திற்கு யார் காரணம்? அருங்காட்சியத்தில் வைக்கப்படவேண்டிய விமானத்தில்தான் இவர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

இதுபோன்று 6 பேர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார்கள். நாட்டில் விமானிகள் இவ்வாறு உயிரிழப்பது மிகவும் துரதிஸ்டவசமான ஒன்றாகும்.

இதற்கு யார் பொறுப்பு என்பதை அரசாங்கம் கூறவேண்டும். கிபீர் விமானங்களை புதுப்பிக்க 55 மில்லியன் டொலரை அரசாங்கம் செலவு செய்தது.

ஆனால், 0.75 மில்லியன் டொலர்தான் இந்த விமானத்தின் பெறுமதி. இவ்வாறு இருக்கையில், பழைய விமானங்களை பயன்படுத்தி இன்னமும் உயிர்களை பலி கொடுக்கவா அரசாங்கம் முற்படுகிறது?-என்றார். (அ)

# உமாரா வாக்குமூலம்!

கொழும்பு, ஓக. 09
2023 லங்கா பிரிமியர் லீக் கிரிக்கட் தொடரின் ஆரம்ப நிகழ்வின் போது, நாட்டின் தேசிய கீதத்தின் பொருள் மாறுபட இசைத்தமை தொடர்பில் பாடகி உமாரா சிங்கவன்ஸ பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையான அவர் வாக்குமூலத்தை வழங்கினார்.

இதன்போது தேசிய கீதத்தை இசைக்கும்போது "மஹதா" எனும் வார்த்தையை தான் உச்சரிக்கவில்லை என அவர் கூறியுள்ளார்.

அத்துடன் சம்பவம் தொடர்பில் கிரிக்கெட் சபை மற்றும் கல்வி அமைச்சின் இசைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

# ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக. 09
2026 ஆம் ஆண்டு வரையிலான பங்களிப்புகளுக்கான வருடாந்த வட்டி வீதம் குறைந்தபட்சம் 09 வீதமாக தொடர்ந்தும் பேணுவதற்கு ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 5 வருடங்களில் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்காக செலுத்தப்பட்ட வருடாந்த வட்டி வீதத்தை கருத்திற்கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த நிதியத்துக்கு சொந்தமான திறைசேரி பிணைமுறிகளை மீள் கட்டமைப்பதால், அந்த நிதியத்தின் அங்கத்தவர்களினது ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகள், பாதிக்கப்படாத வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான, யோசனை ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

# தமிழர் பிரதேசங்களை பௌத்த இடங்களாக அரசு பிரகடனப்படுத்துவது வேதனைக்குரியது

## ஆறுதிருமுருகன் கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 09
இலங்கையில் உள்ள தமிழர் பிரதேச இடங்களை திட்டமிட்டு பௌத்த இடங்களாக பிரகடனப்படுத்துவது வேதனைக்குரியது என இந்து சமய சங்கங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் கூட்டமைப்பு சார்பாக அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு தமிழர்களின் பாரம்பரிய அடையாளச் சின்னங்களை பௌத்த அடையாள இடங்களாக மாற்ற நினைப்பது மிகுந்த வேதனை தருகிறது. கிழக்கில் திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று சைவ மக்களின் புனித தீர்த்தமாக பலநூறு வருடங்களாக பேணிப் பாதுகாக்கப்பட்டது.

சைவசமயத்தை பெரிதும் நேசித்த இலங்கை வேந்தன் இராவணனோடு தொடர்புடைய இப்புனித தீர்த்தம் இன்று தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் அபகரித்துள்ளமை அநீதியான செயலாகும். தொடர்ந்து தொன்மை வாய்ந்த சைவ ஆலயங்களை திட்டமிட்டு அபகரிக்க நினைப்பது அதர்மச் செயலாகும்.

தற்போது பறாளாய் முருகன் கோவிலில் உள்ள அரசமர விருட்சத்தை சங்கமித்தை வரலாற்றோடு தொடர்புபடுத்தி வர்த்தமானி வெளியிட்டுள்ளமை சைவ மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்துள்ளது. சைவ நிறுவனங்களையோ, வடக்கில் உள்ள பல்கலைக்கழக அறிஞர்களையோ தொடர்பு கொள்ளாமல் தொல்லியல் திணைக்களம் புதிய பிரகடனங்கள் செய்வது கவலையளிக்கிறது. கீரிமலைப் புனித தீர்த்த கேணியை திடீரென தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பது மிகவும் தவறான செயலாகும்.

தெல்லிப்பழை கிராம முன்னேற்றச் சங்கம், வல்லிபுரம் என்ற பெரியவரின் நிதியுதவியுடன் 1916ஆம் ஆண்டு தூர்வைக் குளமாக இருந்த இக்கேணியை பொலிகலால் கட்டி பாதுகாத்தது. இன்றுவரை வலி. வடக்குப் பிரதேச சபை குளத்தைப் பாதுகாப்பதுடன் காவலர்களை நியமித்து கண்காணித்து வருகிறார்கள்.

திணைக்களத்திற்கு உரித்தாக பிரகடனம் செய்திருப்பது நீதியற்ற செயல். எனவே ஜனாதிபதி தொல்லியல் திணைக்களத்தின் மேற்குறித்த பிரகடனங்களை மீளப்பெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சைவமக்களின் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறது. தாங்கள் இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்து ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்-என்றுள்ளது. (அ)

# உடவளவ நீர்த்தேக்கத்துக்கு சமனல வாவியிலிருந்து நீர்!

கொழும்பு, ஓக. 09
சமனல வாவியிலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்திற்கு நீரை திறந்துவிடும் நடவடிக்கை நேற்று அதிகாலை 2.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

120 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு உடவளவ நீர்த்தேக்கத்திற்கு நீர் திறந்து விடப்படுவதாக மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

அதனடிப்படையில், செக்கனுக்கு 42 கன மீற்றர் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வரையான நிலவரத்தின் படி சமனல வாவியின் மொத்த நீர்மட்டம் 13 வீதமாக பதிவாகியுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மிகக் குறைந்தளவான நீர் காணப்படுவதனால் நேற்று முன் தினம் வரை சமனல வாவியிலிருந்து மிகக் குறைந்த அளவிலான மின்சாரமே உற்பத்தி செய்யப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்தார்.

எனினும், பயிர்ச்செய்கைக்கு அதிகளவான நீரை விநியோகிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நேற்று முதல் மின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு நீர்த்தேக்கத்தில் இருந்து அதிகளவான நீர் வெளியேற்றப்படவுள்ளது.

நீரை வெறுமனே திறந்து விடுவதால் எந்தப் பயனும் இல்லை என்பதை கருத்திற்கொண்டே, மின்சாரத்தை உற்பத்தி செய்தவாறு தண்ணீர் திறந்து விடப்படுமென பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதனிடையே, உடவளவ நீர்த்தேக்கத்திற்கு நீரை விடுவிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் காரணமாக அவசர மின் கொள்வனவை மேற்கொள்ள நேரிடுமென மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதனடிப்படையில், மாத்தறை மற்றும் எம்பிலிப்பிட்டிய மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து எதிர்காலத்தில் மின்சாரம் கொள்வனவு செய்யப்படலாமென அவர் குறிப்பிட்டார்.

100 மெகாவாட் மின்சாரம் அவசரமாக கொள்வனவு செய்யப்படவுள்ளதாக மின்சக்தி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் பயன்படுத்திய வார்த்தையால் அமளி



கொழும்பு, ஓக. 09
பாராளுமன்றத்தில் ஆண் விபசாரி இருப்பதாகவும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் இரும்புகளை தான் வெட்டி எடுப்பதாக அந்த விபசாரி குற்றம் சுமத்துவதாகவும் ஆரம்ப கைதொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரும்புகளை அப்படி இலகுவாகக் கொள்ளையிட முடியாது. அங்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் உள்ளனர்.

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் இரண்டு முறை முறைப்பாடுகளை செய்துள்ளேன்.

தற்போதும் பொலிஸ்மா அதிபருக்கு தகவல் அனுப்ப உள்ளேன்-என்றார்.

இதனிடையே ஆண் விபசாரி என்ற வார்த்தையை அவர் பாராளுமன்றத்தில் பயன்படுத்தியமையால் சபையில் அமளி ஏற்பட்டது.

இதனையடுத்து இந்த வார்த்தையை சபை குறிப்பேட்டில் இருந்து நீக்குவதாக பிரதிச் சபாநாயகர் அறிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகரவையே சாமர சம்பத் தசநாயக்க, ஆண் விபசாரி என்று மறைமுகமாக குறிப்பிட்டிருந்தார். (அ)

# அதானிக்காக பகடைக் காய்களான தமிழர்கள்




இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கே சமீபத்தில் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டு இந்தியாவின் பிரதமர் மோடியையும் அவருடைய நண்பரான தொழிலதிபர் அதானியையும் சந்தித்து பேசியுள்ளார். ரணிலின் இந்தியப் பயணம் பல ஒப்பந்தங்களை உறுதி செய்துள்ளது. இந்தியா அளித்த பல்லாயிரம் கோடி கடன்களுக்காக அதானியுடனான வர்த்தக உறவை வலுப்படுத்தி அனுப்பியிருக்கிறார் மோடி. இரு நாடுகளின் பொருளாதார உறவை வலுப்படுத்துவதாக இலங்கையை, தமிழீழப் பகுதிகளை ஏலம் விட்டுச் சென்றிருக்கிறார் ரணில்.

இலங்கை அதிபராக பதவியேற்ற பிறகான, முதல் முறைப் பயணமாக ஜூலை 20, 21 ஆகிய நாட்களில் இந்தியா வந்து மோடியை சந்தித்தார் ரணில். இந்த சந்திப்பின் பொழுது இரு நாடுகளும் மின்சாரம், எரிசக்தி, சுற்றுலா, வர்த்தகம் போன்ற துறைகளில் பொருளாதார நல்லிணக்க பங்கீட்டாளர்களாக செயல்படும், நாடுகளுக்கிடையில் பெட்ரோலிய குழாய்கள் அமைத்தல், தரைப் பாலம் நிறுவுதல், மின் இணைப்புகள் ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்படும் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் குறித்து விரைவில் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்குவோம் எனவும் அறிவித்தனர். இதற்கிடையில் இந்தியாவின் முக்கிய வடநாட்டுத் தொழில் அதிபர்களை சந்தித்தும் பேசினார் ரணில்.

இலங்கைக்கு இதுவரை 40 ஆயிரம் கோடியை வழங்கியிருக்கிறது இந்தியா. பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்காக என வெளியில் சொல்லப்பட்டாலும் இதற்கான பிரதிபலனை அதானிக்கே அள்ளி வழங்கியது இலங்கை. மோடியின் வற்புறுத்தல்களால் மன்னார் மற்றும் பூநகரியில் கற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை அதானி பெற்றார். கிட்டத்தட்ட 4100 கோடிக்கான திட்டம் இது. மோடியின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே இந்த திட்டம் அதானிக்கு வழங்கப்பட்டது என்னும் ரகசிய செய்தியை அந்நாட்டின் மின்துறை அமைச்சர் வெளியிட்டார்.

இந்த செய்தி அம்பலமானதால் மோடி அரசு அவசரமாக ரணிலைத் தொடர்பு கொண்டது. ரணில் உடனடியாக தனது டிவிட்டர் பக்கத்தில் மறுப்பு தெரிவித்தார். ரகசிய செய்தியை கசிய விட்டதால் அந்நாட்டின் மின் துறை அமைச்சர் பதவி விலகும் அளவுக்கு நெருக்கடிக்கு தள்ளப்பட்டார்.

அதானியின் இந்த காற்றாலைத் திட்டத்திற்கு தமிழர்களின் நிலங்களை மிகவும் சொற்ப அளவு பணம் கொடுத்து பறித்துக் கொடுத்தது இலங்கை அரசு. இந்த திட்டத்திற்குரிய நில அளவு, முதலீடு, நிதி முதலான எந்த வெளிப்படையான தகவல்களும் மன்னார் தமிழ் மக்களுக்கும், அரசியல் பிரதிநிதிகளுக்கும் தெரிவிக்கப்படவில்லை என அங்கு எதிர்ப்பு கிளம்பியது. இந்த காற்றாலைத் திட்டக் கட்டுமானத்திற்காக மண் அகழப்படும் போது கடல் அரிப்பு ஏற்பட்டு மன்னார் மாவட்டம் கடல் மட்டத்திற்கு கீழே சென்று விடும் நிலை ஏற்படும், பெருமளவிலான தென்னை மரங்கள் அழிக்கப்படும், மீன் வளம் பாதிக்கப்படும், வாழ்வாதார சூழல் பாதிக்கப்பட்டு மக்கள் வறுமை நிலைக்கு ஆளாவார்கள் என மன்னார் மாவட்டத்தின் அரசியல் பிரதிநிதிகள் கருத்து கேட்புக் கூட்டத்தில் கருத்துகள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படும் காற்றாலை மின் கோபுரங்களாலும், தொடரும் கனிம வள அகழ்வுக்காகவும் 4000 துளைகளுக்கும் மேல் போடப்பட்டதால் பல போராட்டங்களை நடத்தினாலும் எங்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.என். ஆலம் கூறியிருந்தார். ஆனால் இவர்களின் கருத்துகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டது. தமிழர்களின் கோரிக்கைகளை என்றுமே மதிக்காத இலங்கை அரசு அதானியின் காற்றாலைத் திட்டத்திற்கு பச்சைக்கொடி காட்டியது. அதானி நிறுவனத்தின் பணி தொடங்கப்பட்டு மன்னார் காற்றாலைத் திட்டம் டிசம்பர் 2024-ல் கட்டி முடிக்கப்படும் என அறிவிப்பும் வெளியாகிவிட்டது.



ஈழத் தமிழர்களை பகடைக்காயாக வைத்து இலங்கையும், இந்தியாவும் ஆடும் சதுரங்க ஆட்டத்தின் இறுதியில் அதானியின் வர்த்தக நோக்கமே வெற்றி பெறுகிறது. நல்லிணக்கமும், நட்பும் குஜராத்தி பனியா நிறுவனங்களுக்காக மட்டுமே, தமிழக மீனவர்களின் நலனுக்காக அல்ல என்னும் இந்தியாவின் நோக்கமும் தெளிவாகத் தெரிகிறது.

## மே பதினேழு இயக்கம்

இதைப் போலவே, இந்தியாவின் வற்புறுத்தலின் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கு வழங்க மகிந்த ராசபக்சே அரசினால் 2019-ம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால் சிங்கள மக்களிடையே தோன்றிய கடுமையான எதிர்ப்பினை சமாளிக்க முடியாத சிங்கள அரசு இந்தியாவிடம் பேச்சுவார்த்தை மேற்கொண்டது. அதன் பயனாக இலங்கை துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையம் அதானிக்கு வழங்கப்பட்டது. 5700 கோடி மதிப்புள்ள இந்த திட்டத்தில் 51 வீதம் அதானியின் பங்காகும். ஜப்பான் நிறுவனமும், இலங்கை பிரதேச சபையும் மீதமுள்ள பங்கினை பகிர்ந்து கொண்டன. இதை தன்னிச்சையாக எடுத்த முடிவு எனவும், முதலீட்டாளர்களுக்கு அழைப்போ, திறந்த விலை மனுக்கோரலோ விடப்படவில்லை என இலங்கை எதிர்கட்சிகள் குற்றம் சாட்டின. இருப்பினும் அமைச்சரவை ஒப்புதல் அளித்து அதானிக்கு கையளித்தது. மேலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலான பசுமை ஹைட்ரஜன் திட்டம் துவங்குவதற்கும் அதானி ரணில் இடையே சந்திப்பும் இலங்கையில் ஜூலை 21, 2023-ல் நடந்தது.

மோடி- ரணில் சந்திப்பின் பொழுது, இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையில் எரிசக்தி நிலையங்களை மேம்படுத்தப் போவதாகவும், இலங்கைக் கடற்கரைப் பகுதியில் ஹைட்ரோ கார்பன் சோதனை நடத்தப்படும் எனவும் அறிவித்தார் அவர். திருகோணமலையை பெரிய தொழிற்சாலைகளின் மையமாக மாற்றப் போவதாகவும் கூறினார். விரைவில் அதானி, டாடா போன்ற பனியா மார்வாடி குஜராத்தி தொழில் அதிபர்கள் இந்த அனைத்து திட்டங்களிலும் நுழைந்து கொள்ளை லாபம் ஈட்டுவார்கள். தமிழீழத்தின் இயற்கை வளமும் இந்த நிறுவனங்களின் கொள்ளைக்கு பலியிடப்படும். தமிழர்களை முன்வைத்து இலங்கை - இந்திய அரசுகள் இணைந்து நடத்தும் கண்துடைப்பு நாடகமும், ஈழத் தமிழினத்திற்கு என்றுமே தீர்வைத் தராததுமான 13 வது சட்டத்திருத்தம் குறித்து இருவரும் பேசினர். ராசீவ் காந்தி - ஜெயவர்த்தனே இடையே 1987-ல் ஏற்படுத்தப்பட்ட இந்த 13 வது சட்டத்திருத்த ஒப்பந்தம் ஈழத் தமிழர்களின் ஒத்துழைப்பு இல்லாமலே கொண்டு வரப்பட்டது. இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் சாசனத்தின்படி, பெரும்பான்மை உறுப்பினர்களே சட்டத்திருத்தத்தை தீர்மானிக்கும் நிலையில், சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அப்போதே இதனை ஏற்கவில்லை. அரைமனதுடன் உருவாக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாண அரசும் பொம்மை அரசாக அமைந்தது. இலங்கை நீதிமன்றத்தி னால் இந்த இணைப்பும் கூட பின்னர் பிரிக்கப்பட்டது. இன்று வரை தமிழர் நிலங்களில் அளவுக்கு மீறிய சிங்க ளக் குடியேற்றம் நடக்கிறது. நிலம், கல்வி, காவல்துறை, நீதித்துறை என எல்லா முடிவெடுக்கும் அதிகாரமும் பெரும்பான்மையான சிங்கள அரசிடமே குவிக்கப்பட்ட நிலையில் எந்தப் பயனுமற்ற இந்த சட்டத்தை மீண்டும் கையிலெடுக்கிறார்கள்.

ஈழத்தின் வடக்கு கிழக்கு மாகாணத்தின் தமிழ் அரசியல் பிரதிநிதிகளை ரணில் விக்கிரமசிங்கே மே 15, 2023 அன்று சந்தித்துப் பேசினார். இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடுகள் எதுவும் எட்டப்படவில்லை. இந்த சந்திப்பு, 'ரணிலுக்கு தன்னை தமிழர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாரான தலைவர் என்னும் எண்ணத்தை சர்வதேசத்திடம் விதைக்க மட்டுமே காரணமாக இருக்கிறது' என தமிழ் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்த சூழலில், 13 வது சட்டத்திருத்தத்தை நிறைவேற்றினால் மீண்டும் இனக் கலவரம் மூளும் என இலங்கையின் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரா கூறுகிறார். குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வைக் கூட இனவெறியுடன் அணுகும் சிங்களப் பேரினவாதிகளின் கூடாரம் தான் இலங்கை என்பதை மீண்டும் நிலைநாட்டி இருக்கிறார்கள்.

இலங்கையின் ஆளுங்கட்சி, எதிர்கட்சி என தமிழர்களை முன்வைத்து தங்கள் ஆதாயங்களைப் பெறும் பேரினவாதிகளின் கட்சிகளின் பிடியில் இலங்கையின் ஆட்சி பீடங்கள் அமையப் பெறுகின்ற நிலையில், தமிழ் நாடு பாஜக தலைவர் அண்ணாமலை, தமிழர்களை ஏமாற்றும் கருவியாக இந்த 13-வது சட்டத்திருத்தத்தை கொண்டு இலங்கையில் தமிழர்களின் உரிமையை நிலைநாட்டிட வலியுறுத்துவோம் என வீராவேசமாகப் பேசுகிறார். 1987-ம் ஆண்டு தொடங்கி 36 வருடங்கள் கடந்தும் கிடப்பில் போடப்பட்ட இந்த ஒப்பந்தத்தை எடுத்து தூசு தட்டி தமிழர்களின் கண்களில் தூவி விடுகிறார். இந்த 13 வது சட்டத்திருத்தத்தின் அடிப்படை விவரங்கள் எதுவும் தெரியாமலே ஈழத் தமிழர்களுக்கு தீர்வு கொடுக்க முனைவதாக நடிக்கிறார் அண்ணாமலை.

(09ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வந்தார் ராகுல் காந்தி!

ராகுல் காந்தி மக்களவை உறுப்பினராக மீண்டும் தொடர மக்களவைச் செயலகம் அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்து வயநாடு தொகுதி எம்.பி.யாக ராகுல் காந்தி மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வந்தார்.

'மோடி' குடும்பப் பெயர் தொடர்பான வழக்கில் கடந்த மார்ச் மாதம் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

இருப்பினும் இந்தத் தண்டனையை கடந்த வெள்ளிக்கிழமையன்று உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்தது. இதைத் தொடர்ந்து அவர் பதவியில் நீடிக்க மக்களவைச் செயலகம் அனுமதி வழங்கியிருக்கிறது. இதற்கான அறிவிப்பை நாடாளுமன்றச் செயலகம் வெளியிட்டிருக்கிறது.

மணிப்பூர் விவகாரம், நம்பிக்கை இல்லாத் தீர்மானம், ஹரியான வன்முறை ஆகிய முக்கிய விவகாரங்கள் பேசப்பட்டு வரும் நிலையில் ராகுல் காந்தி மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வருவது முக்கியத்துவம் பெறுகிறது.

**உச்ச நீதிமன்றம் கூறியது என்ன?**

தனது தீர்ப்பில் சூரத் நீதிமன்றம், குஜராத் உயர் நீதிமன்றம் குறித்தும் கேள்வி எழுப்பிய நீதிபதிகள், குற்றத்தை ஈடுசெய்ய முடியாத, ஜாமீன் பெறக்கூடிய மற்றும் அடையாளம் காணக்கூடிய வழக்குகளில், விசாரணை நீதிபதி அதிகபட்ச தண்டனை வழங்குவதற்கான காரணங்களை வழங்க வேண்டும் என்றும் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்ததற்கான காரணங்களை விளக்க உயர் நீதிமன்றம் பல பக்கங்கள் செலவழித்தும், இந்த அம்சங்கள் கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று உச்ச நீதிமன்ற் கூறியிருந்தது.





உச்ச நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த ராகுல் காந்தி, 'சத்தியம் எப்போதும் வெல்லும், இன்று இல்லையென்றால் நாளை வெல்லும், நாளை இல்லையென்றால் அடுத்த நாளில் வெல்லும். மக்களின் ஆதரவுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்," என்றார்.

ராகுல் காந்தி மீது அவதூறு வழக்கு தொடர்ந்த புர்னேஷ் மோடி, உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்து ஊடகங்களிடம் பேசும்போது, நீதிமன்ற தீர்ப்பை வரவேற்கிறோம். அதே நேரத்தில் எங்களின் சட்டப் போராட்டம் தொடரும் எனக் குறிப்பிட்டார்.

**ராகுல் காந்தி மீதான வழக்கின் பின்னணி என்ன?**

கடந்த 2019ஆம் ஆண்டு மக்களவை தேர்தலையொட்டி கர்நாடகாவின் கோலாரில் ராகுல் பிரசாரம் செய்தார். அப்போது, தன்னுடைய பேச்சில் "எப்படி திருடர்கள் அனைவருக்கும் மோடி என்ற குடும்பப் பெயர் இருக்கிறது," என்று நீரவ் மோடி, லலித் மோடி போன்றோரைக் குறிப்பிட்டு ராகுல் கருத்து தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக வழக்கறிஞரும் சூரத் மேற்கு தொகுதி பாஜக சட்டமன்ற உறுப்பினருமான புர்னேஷ் மோடி சூரத் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

நான்கு ஆண்டுகள் நடந்த வழக்கின் விசாரணையில் கடந்த மார்ச் 23ஆம் தேதி தீர்ப்பளித்த சூரத் நீதிமன்றம், "இந்திய தண் டனைச் சட்டம் பிரிவு 499 மற்றும் 500-இன் படி ராகுல் காந்திக்கு அதிகபட்ச தண்டனையான 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 15,000 ரூபாய் அபராதமும் விதிக் கப்படுகிறது," எனத் தீர்ப்பளித்தது.

எனினும், தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு ஏதுவாக தண்டனை 30 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது. அதேநேரத்தில் சூரத் நீதிமன்ற தீர்ப்பு வெளியான அடுத்த நாளே ராகுல் காந்தி எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதாக மக்களவை செயலகம் அறிவித்தது.

சூரத் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி குஜராத் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். எனினும், கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்புக்குத் தடை விதிக்க முடியாது என்று கூறிய குஜராத் உயர்நீதிமன்றம், அவருக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறை தண்டனை சரியானதுதான் என்று கூறியது.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் ராகுல் காந்தி தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்ட நிலையில், அந்த வழக்கில்தான் தற்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எம்.பி. பதவி மீண்டும் வழங்கப்பட்டு விட்டதால், நேற்று மன்தினமே அவர் நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தார். ●

# அதானிக்காக பகடைக் காய்களான...

(08ஆம் பக்கத் தொர்ச்சி)

குஜராத்தி பணியா மார்வாடி முதலாளிகளுக்காக, இலங்கையுடன் இந்தியா கறாராக பொருளாதார ஒப்பந்தங்களைப் போடும் அளவுக்கு, மேம்போக்காக கூட தமிழக மீனவர்கள் கைது செய்வதற்கு எதிராகப் பேசுவதில்லை. எல்லை தாண்டி மீன் பிடிக்கிறார்கள் என மீனவர்களின் படகுகள், வலைகளை நாசப்படுத்துவதோடு அவர்களைக் கைது செய்து சிறையிலடைக்கிறது இலங்கை கடற்படை. கடந்த நான்கு ஆண்டுகளில மட்டும் 626 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் படகுகளை பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

இந்தாண்டு 2023, ஜனவரியில் இருந்து இதுவரை 80க்கும் மேற்பட்ட மீனவர்களை கைது செய்துள்ளது இலங்கை அரசு. இந்நிலையில் ரணில் வருகையின் காரணமாக 22 பேர் விடுவிக்கப்பட்டனர். இரு நாடுகளின் சாதக பாதகங்களுக்கு இடையில் தமிழக மீனவர்களை அலைக்கழிக்க 'எல்லைத் தாண்டுகிறார்கள்' என்னும் பொய்களை வீசுவதை இலங்கை அரசு ஒரு தந்திரமாகவே வைத்திருக்கிறது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல் என்பது தெரிந்தும் இலங்கைக்கு எந்த கண்டனங்களும் இந்தியா தெரிவிப்பதில்லை. இலங்கையின் தெற்கு முனையமான அம்பந்தோட்டை துறைமுகத்தை சீனா அளித்த கடனுக்காக 99 வருடங்களுக்கு அடகு வைத்தது இலங்கை. தனது ராணுவ தேவைக்காக எந்நேரமும் சீனா இந்து துறைமுகத்தை பயன்படுத்திக் கொள்ளும் என்கிற நிலையிருந்தும் இந்தியாவால் இலங்கையை எதிர்க்க முடியவில்லை.

சீனா தனது அரசியல் மற்றும் புவிசார் நலனுக்கான முதலீடாக இலங்கையின் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக சுமார் 60 ஆயிரம் கோடியை கடனாக அளித்திருக்கிறது. சீனாவின் செய்கைக்கோள் மற்றும் ஏவுகணை கண்காணிப்பு கப்பலான யுவான் வாங் 5 என்கிற போர்க் கப்பல் 2022, ஆகஸ்டில் இலங்கைக்கு வந்த போது இந்தியா கவலை மட்டும் தெரிவித்தது. வெளிநாட்டு கப்பல்கள் மற்றும் அவைகளால் ஈட்டும் வருவாயை நாங்கள் என்றும் வரவேற்போம் என்பதே இலங்கையின் பதிலாக இருந்தது. இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜூன், 2023-ல் சீனாவிற்கு சென்றிருந்த போது, சீனாவின் நீண்ட நாள் திட்டமான பட்டுச் சாலை திட்டத்திற்கு ஒத்துழைப்பதாக உறுதியளித்தார். இந்த திட்டம் அமலுக்கு வந்தால் இந்தியாவை சீனா எளிதாக உளவு பார்க்கும் வாய்ப்பு கிடைத்துவிடும்.

இலங்கையில் மகிந்த ராசபக்சே ஆட்சி ஏற்படுத்திய பேரழிவுப் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக கடந்த வருடம் 2022-ல் கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது. உணவுப் பொருள், எரிபொருள், உரத் தட்டுப்பாடுகள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட சிங்கள மக்கள் தெருவுக்கு வந்தனர். இலங்கை போராட்டக் களமானது. ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து போராட்டக்காரர்கள் அனைத்தையும் தகர்த்தனர். இலங்கையின் பொருளாதார நசிவிற்கு காரணமாக அந்நாட்டின் பணவீக்கம், அதிகப்படியான வெளிநாட்டுக் கடன், விவசாயக் கொள்கை போன்ற பலவும் முன் வைக்கப்பட்டாலும் தமிழர் பகுதிகளில் மிதமிஞ்சிய அளவில் நிறுத்தப்பட்ட சுமார் 3 லட்சம் சிங்கள ராணுவத்திற்கு செலவழித்த தொகைகளே முக்கியமானது என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாக இருந்தது. மக்களின் கிளர்ச்சியை அடுத்து இலங்கை முடங்கியது. வெளிநாட்டிற்கு தப்பி ஓடினார் ராசபக்சே. இந்த நிலையில் அதிபராக பொறுப்பேற்றவரே ரணில் விக்கிரமசிங்கே.

இலங்கையின் அதிபரானதும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக தங்களுக்கு கடன் வழங்கிய நாடுகளான அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இலங்கை துறைமுகத்தையும், தமிழீழப் பகுதிகளின் நிலங்களையும் அடகு வைத்து பொருளீட்டும் பணிகளை செய்கிறார் ரணில் விக்கிரமசிங்கே. இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் ரணிலின் இப்போதைய இந்தியப் பயணமும் இருக்கிறது.

ஈழத் தமிழர்களை பகடைக்காயாக வைத்து இலங்கையும், இந்தியாவும் ஆடும் சதுரங்க ஆட்டத்தின் இறுதியில் அதானியின் வர்த்தக நோக்கமே வெற்றி பெறுகிறது. நல்லிணக்கமும், நட்பும் குஜராத்தி பனியா நிறுவனங்களுக்காக மட்டுமே, தமிழக மீனவர்களின் நலனுக்காக அல்ல என்னும் இந்தியாவின் நோக்கமும் தெளிவாகத் தெரிகிறது. ●

# 'நேந்தம்பியும் நிலாப்பெண்ணும்' நூல் சாய்ந்தமருதில் வெளியீடு



அம்பாறை, ஓக. 09

சாய்ந்தமருதில் பெண் எழுத்தாளரின் முதல் நாவலான "நேந்தம்பியும் நிலாப் பெண்ணும்" என்ற நாவல் திருமதி அஸ்மியா அஷ்ரப்பினால் கடந்த திங்கட்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் வெளியிடப்பட்டது.

கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஷ்ரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சட்டம் ஒழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம். சலீம் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் கௌரவ அதிதியாகவும் , முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ஏ. பீர் முஹம்மட், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம் றிம்சான் ஆகியோர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டதோடு, நூல் நயவுரையை ஏ. பீர் முஹம்மட் வழங்கினார்.

இதன் போது நூலாசிரியர் திருமதி அஸ்மியா அஷ்ரப் தனது அன்புக் கணவர் அஷ்ரப்பிடம் முதற் பிரதியைக் கையளித்ததோடு, கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், குடும்பத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். (அ)

# திருக்கோவில் பகுதியில் கடலரிப்பு அதி தீவிரம்!



அம்பாறை, ஓக. 09

திருக்கோவில் பிரதேசத்துக்கு உட்பட்ட தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசங்களில் பாரிய கடலரிப்பு மீண்டும் ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் தம்பிலுவில் குருகுலம் பகுதியில் பாரிய கடலரிப்பு மிகவும் தீவிரமாக இருந்தது .

நேற்று அங்கு பல தென்னை மரங்களை கடல் காவு கொண்டது.

மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றார்கள்.மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாதுள்ளது. அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து கவனம் எடுப்பார்களா என்று மக்கள் வினவுகின்றார்கள். (அ)

# தேயிலைக் கொழுந்து விலை கடும் வீழ்ச்சி!

கொழும்பு, ஓக. 09

தேயிலைக் கொழுந்துகளின் விலையில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையால் தேயிலை தோட்ட உரிமையாளர்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

அதன்படி, கடந்த காலங்களில் 350 ரூபாய் தொடக்கம் 400 ரூபாவாக உயர்வடைந்திருந்த ஒரு கிலோ பச்சை தேயிலைக் கொழுந்தின் விலை தற்போது 160 ரூபாய் தொடக்கம் 65 ரூபாயாக குறைவடைந்துள்ளதாக தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தேயிலையின் நிலை மோசமடைந்ததன் காரணமாக நாட்டில் தேயிலையின் விலை ஏலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளமையே விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் தேசிய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் லால் பிரேமநாத் தெரிவித்தார்.

அவர் மேலும், தெரிவிக்கையில்-

டொலரின் மதிப்பு உயர்வடைதல் மற்றும் வீழ்ச்சியடைதலும் விலை ஏற்றத்தை பாதித்துள்ளது.

தேயிலைக்கு உரிய உரம் கிடைக்காமை, தேயிலை செடிகளுக்கு உரங்களை முறையாக இடுவதற்கு இயலாமை, உரத்தின் விலை அதிகரிப்பு, போதியளவு உரம் இல்லாமை போன்ற காரணங்களினால் தேயிலைச் செடிகளின் வளர்ச்சி குறைவடைந்துள்ளது - என்றார். (அ)







# மாமாங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவம் ஆரம்பம்!




மட்டக்களப்பு, ஒக. 09

இராம பிரானால் வழிபடப்பட்ட ஆலயம் என்ற பெருமையினையும் பிதிர்கடன் தீர்க்கும் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்தினையும் கொண்ட வரலாற்றுசிறப்புமிக்க மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மூர்த்தி,தீர்த்தம், தலம் ஆகியனவற்றினை ஒருங்கே கொண்ட மாமாங்கேஸ்வரர் ஆலயமானது கிழக்கிலங்கையில் வரலாற்று சிறப்புமிக்க ஆலயமாக கருதப்படுகின்றது.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை விசேட பூசைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றம் இடம்பெற்றது.

10 தினங்கள் நடைபெறவுள்ள வருடாந்த மஹோற்சவத்தில் தினமும் பிற்பகல் தம்ப பூசை, சுவாமி உள்வீதியுலாவும் மாலையில் தம்ப பூசை,வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள் வீதியுலா வெளிவீதியுலா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தேரோட்டமும் மறுதினம் 16ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மாமாங்கேஸ்ரவர் தீர்த்தக்குளத்தில் ஆடிஅமாவாசை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

ஆலய வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் ஆலய வளாகத்தில் பக்தர்களின் நன்மை கருதி பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் பணிமனை திறப்பு



மட்டக்களப்பு, ஒக. 09

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான மக்கள் பணிமனை திறந்து வைக்கும் நிகழ்வும்,மக்கள் சந்திப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான அமைப்பாளர் யூ.கே.ஆதம் லெப்பை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மக்கள் பணிமனையினை திறந்து வைத்ததுடன் மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டார்.

முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகே, ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனை தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.எம்.ஜெமீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான பொத்துவில் தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு பொதுச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டு சபையில் மக்கள் அங்கீகாரம் பெறப்பட்டது.

# மட்டக்களப்பு எருவில் கண்ணகி ம.வியில் அடிக்கல் நாட்டு விழா



மட்டக்களப்பு, ஒக. 09

மட்டக்களப்பு மாவட்டம் எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் மற்றும் பாடசாலையின் 75 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய நினைவுத் தூபி ஆகியவற்றிற்கான அடிக்கல் கடந்த 5ஆம் திகதி நடப்பட்டது.

சமூக ஜோதி மு.இளங்குமார் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பழைய முன் நுழைவாயினை அகற்றி புதிய நுழைவாயில் அமைக்கும் பொருட்டு அவரது மனைவி திருமதி நிவேதனா இளங்குமாரின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நடுகை பாடசாலையின் அதிபர் சி. சத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது.

1993 ஆம் ஆண்டு கண்ணகி மகா வித்தியாலயத்தில் ஆண்டு ஒன்றில் கல்வி கற்ற மாணவர்களினால் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நினைவுத் தூபி அமைப்பதற்கும் அடிக்கல் நடப்பட்டது.

இதற்கான நிதி உதவியினை 1993 ஆம் ஆண்டு பாடசாலையில் ஆண்டு ஒன்றில் இருந்து கல்வி கற்ற மாணவர்களினால் நிதி வழங்கப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் பாடசாலை அதிபர்களான சா.பரமானந்தம் சா.பரமானந்தம் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பழைய மாணவர் சங்க செயலாளர் பழைய மாணவர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டு விழாவை சிறப்பித்தனர்.

(அ)

# சலுகைகள் தருவதாகக் கூறி 'வட்ஸ் அப்' ஊடாக தொந்தரவு

## சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கைது

அம்பாறை, ஒக. 09

அந்தரங்க உறுப்பை வட்அப்ஸ் செயலியின் ஊடாக குடும்ப பெண்ணிற்கு காட்டி தையல் மெசின் உட்பட சலுகைகள் பல தருவதாக கூறி பாலியல் தொந்தரவு மேற்கொண்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வசிக்கின்ற 2 பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண்ணிடம் பல சலுகைகளைப் பெற்று தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி தனது அந்தரங்கப் புகைப்படங்களை குடும்பப் பெண்ணின் வட்அப்ஸ் செயலிக்கு தொடர்ச்சியாக அனுப்பி பாலியல் சேட்டை செய்து வந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்கமைய சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஐயூப் தலைமையிலான பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபரான 41 வயது மதிக்கத்தக்க சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

(அ)

# திண்மக் கழிவு முகாமைத்துவப்பிரிவு ஊழியர்களுக்கு ஏறாவூரில் கௌரவம்

ஏறாவூர், ஒக. 09

ஏறாவூர் நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் வேலைப் பிரிவுகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் 78 ஊழியர்கள் கடந்த 6ஆம் திகதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஏறாவூர் நகரசபையின் சிற்றூழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏறாவூர் வாவிக்கரைப் பூங்காவில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

ஏறாவூர் நகரசபைச் செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத், உதவி பிரதேச செயலாளர் எம். ஆர்.சியாஹூல் ஹக், கணக்காளர் ஆர்.எப்.புஷ்ரா, மேற்பார்வை பொதுச் சுகாதார பரி



சோதகர் எம்.எச்.எம்.பழீல், திடீர் மரண விசாரணை அதிகாரி அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.நஸீர், ஏறாவூர் வர்த்தகர் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாலர் உட்பட நகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(அ)

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்!

## 8 பேர் உயிரிழப்பு!!

கீவ், ஒக. 09

**உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் குறைந்தபட்சம் 8 பேர் பலியாகியுள்ளனர். 31 பேர் காயமடைந்துள்ளனர்.**

**கிழக்கு உக்ரைன் நகரமான போக்ரோவ்ஸ்க் மீது ரஷ்யாவின் இரு ஏவுகணைகள் தாக்கியதில் குடியிருப்பு கட்டடம் சேதமடைந்தது. இந்த தாக்குதலில் சிக்கி இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர்.**

*இதையடுத்து, அங்கு மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.*

*இதேபோல் நடந்த இரண்டாவது தாக்குதலில் டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் உயர்மட்ட அவசர அதிகாரி கொல்லப்பட்டார். மேலும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 19 பொலிஸ் அதிகாரிகள், ஐந்து மீட்புப் பணியாளர்கள் மற்றும் ஒரு குழந்தையும் அடங்குவர். இடிபாடுகளில்*



*சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.* (அ)



# இலங்கையை பூர்வீகமாக கொண்ட ஆஸி.இளைஞரைக் காணவில்லை!

*கான்பரா, ஒக. 09*

*அவுஸ்திரேலியாவில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*திஷாந்தன் என்ற இளைஞரே காணாமல் போயுள்ளார்.*

*இந்த 18 வயதுடைய இந்த இளைஞர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.*


*அவர் மெல்போர்னில் உள்ள பீக்கன்ஸ்ஃபீல்ட் பகுதியில் வைத்தே காணாமல் போனார்.*

*இந்த இளைஞர் கடைசியாக காரில் பயணித்தது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.*

*இச்சம்பவம் குறித்து விக்டோரியா பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.* (அ)

# சந்திரயான் - 3 தனது பணியை ஆரம்பித்தது

## முதல் புகைப்படத்தை வெளியிட்ட இஸ்ரோ



*புதுடில்லி, ஒக. 09*

*நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் பிரவேசித்துள்ள சந்திரயான் - 3 விண்கலம், படம்பிடித்து அனுப்பிய நிலவின் மேற்பரப்பு காட்சிகள் அடங்கிய முதல் புகைப்படத்தை இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பகிர்ந்துள்ளது.*

*நிலவின் தென் துருவத்துக்கு அருகே தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சுமார் 615 கோடி இந்திய ரூபாய் செலவில் வடிவமைத்த சந்திரயான்-3 விண்கலம் கடந்த ஜூலை 14-ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.*

*இதனையடுத்து, பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து விண்கலத்தை இயக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*அதன்படி, கடந்த ஒகஸ்ட் முதலாம் திகதி நள்ளிரவு 12.05 அளவில் விண்கலத்தை புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் இருந்து விலக்கி, நிலவின் ஈர்ப்பு விசைப் பகுதிக்குள் செலுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.*

*மிகவும் சிக்கலான இந்த பணி வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டதன் பயனாக சந்திரயான்-3 விண்கலம், நில வின் ஈர்ப்பு விசைப்பகுதிக்குள் உந்திதள்ளப்பட்டது.*

*இந்தநிலையில், எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 5.47 அளவில் நிலவின் தென் துருவத்தையொட்டிய பகுதியில் ஆய்வு கலம் தரையிறங்கி ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கும் என இஸ்ரோ அறிவித்துள்ளது.*

*அதன் பின்னர் விண்கலத்திலிருந்து ரோவர் கலன் வெளியேறி நிலவின் தரையில் பயணித்து ஆய்வுகளை நடத்தவுள்ளது.*

*நிலவின் தென் துருவத்தில் இதுவரை எந்த நாடும் ஆய்வுகளை முன்னெடுத்திராத நிலையில், சிக்கலான 41 நாட்களை கொண்ட பயணத்திற்காக ஏவப்பட்ட சந்திராயன் 3 விண்கலம், 22 நாட்களுக்குப் பிறகு, கடந்த சனிக்கிழமை சந்திரனின் சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக நுழைந்தது.*

*இந்தநிலையில், குறித்த விண்கலம், படம்பிடித்து அனுப்பிய நிலவின் மேற்பரப்பு காட்சிகள் அடங்கிய முதல் புகைப்படத்தை இஸ்ரோ பகிர்ந்துள்ளது.* (அ)

# டொனால்ட் ட்ரம்ப் தொடுத்த அவதூறு வழக்கு தள்ளுபடி!

*நியூயோர்க், ஒக. 09*

*அமெரிக்கா ஊடகவியலாளர் ஈ. ஜீன் கரோலுக்கு எதிராக முன்னாள்ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்த அவதூறு வழக்கை நியூயோர்க் சமஷ்டி நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.*

*அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தற்போது கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறார். அவர் மீது தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளும், அதற்கு முன்னர் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளும் அவரை நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாக கூறப்படுகிறது.*

*அடுத்த ஆண்டு நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக மீண்டும் போட்டியிட ஒருபுறம் முயற்சித்து*



*வரும் நிலையில், மறுபுறம் தொடர் வழக்கு விசாரணைகளால் அவர் திணறடிக்கப்பட்டு வருகிறார்.*

*அமெரிக்க ஊடகவியலாளர் ஈ. ஜீன் கரோல் சம்பந்தப்பட்ட பாலியல் துன்புறுத்தல் வழக்கில் 5 மில்லியன் டொலர் நஷ்டஈடு வழங்குமாறு டொனால்ட் ட்ரம்ப்பிற்கு சிவில் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இருப்பினும், மே மாத தீர்ப்பில், பாலியல் துன்புறுத்தல் குற்றத்திற்காக மட்டுமே அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டதாகவும், வன்புணர்வு குற்றத்திற்காக அல்ல எனவும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.*

*எவ்வாறாயினும், தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாகவும், பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் கரோல் ஊடகங்களிடம் கூறி வந்துள்ளார்.*

*இதனையடுத்து கரோலுக்கு எதிராக டொனால்ட் ட்ரம்ப் அவதூறு வழக்கை தாக்கல் செய்தார்.*

*இந்த வழக்கு நேற்று முன்தினம் நியூயோர்க் மாவட்ட சமஷ்டி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.*

*இதன் போது கருத்து வெளியிட்டுள்ள நீதிபதி லூயிஸ் கப்லான், கரோல், டொனால்ட் டிரம்ப்பால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்பது உண்மை எனவும் எனினும் இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்காது தள்ளுபடி செய்வதாக கூறியுள்ளார்.* (அ)

# சிரியா மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்!

*டமஸ்கஸ், ஒக. 09*

*சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ் மீது இஸ்ரேல் நேற்று அதிகாலை வான்வழி தாக்குதல் நடத்தியது. 4 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*சிரியாவில் 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் இடம்பெற்று வருகின்றது.*

*சிரிய ஜனாதிபதி பஷீர் அல் அசாத் தலைமையிலான அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் இடம்பெற்று வருகின்றது.*

*உள்நாட்டு போரில் ஜனாதிபதி அசாத்திற்கு ஈரான் ஆதரவு வழங்கி வருகிறது. மேலும், ஈரான் ஆதரவு குழுவினர் சிரியாவில் குவிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த குழுவினர் சிரியா-இஸ்ரேல் எல்லையோரம் இருந்தவாறு இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.இந்த தாக்குதலை தடுக்க சிரியா மீது இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது.*

*சிரியாவின் எல்லைக்குள் புகுந்து இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ் மீது இஸ்ரேல் நேற்று அதிகாலை வான்வழி தாக்குதல் நடத்தியது.*

*இந்த தாக்குதலில் சிரியா பாதுகாப்புப் படையினர் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் மேலும் படுகாயமடைந்துள்ளனர்.*

*சிரியா மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்திய நிலையில் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.* (அ)




# ஓய்வு பெற்றார் தர்ஜினி சிவலிங்கம்!

கொழும்பு, ஒக. 09

இலங்கையின் பிரபல வலைப்பந்தாட்ட வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம் ஓய்வை அறிவித்துள்ளார்.

“பல வருடங்களாக நான் இலங்கையின் வலைப்பந்தாட்ட அணியின் வெற்றிக்காக பங்களிப்பு செய்துள்ளேன், எனக்கு தற்போது 45 வயது ஆசியாவில் வேறு எந்த பெண் வீராங்கனையும் இவ்வளவு காலம் வலைபந்தாட்டத்தில் ஈடுபட்டதில்லை”, என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023 உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் நான் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளேன்

இலங்கை அணி நாடு திரும்பினால்கூட நான் அவர்களுடன் இலங்கை வரமாட்டேன். சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றாலும்கூட அவுஸ்திரேலியாவில் கழக மட்ட போட்டிகளில் விளையாடுவேன். என்று தெரிவித்துள்ள அவர், “இலங்கையை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன். இலங்கையை பிரதிநிதித்துவம் செய்ததன் காரணமாகவே நான் இன்று உலகம் முழுவதும் அறியப்பட்டுள்ளேன்”, என்றும் கூறினார்.

தர்ஜினி சிவலிங்கம் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சன்ரைசர்ஸ் அணியின் பயிற்றுநரானார் விற்றோரி!



சென்னை, ஒக. 09

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் விளையாடி வரும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் தலைமை பயிற்றுநராக டானியல் விற்றோரி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2013 முதல் ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அங்கம் வகித்து வருகிறது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி. சன் குழும நிறுவனம்தான் இந்த அணியின் உரிமையாளர். கடந்த 2016இல் இந்த அணி சம்பியன் பட்டம் வென்றிருந்தது. கடந்த மூன்று ஐ. பி. எல் தொடர்களில் லீக் சுற்றோடு நடையை கட்டி வருகிறது. அணிக்குள் பல மாற்றங்கள் மேற்கொண்டும் அது பலன் அளிக்கவில்லை.

இந்தச் சூழலில் அணியின் தலைமை பயிற்சியாளராக செயல்பட்டு வந்த பிரையன் லாராவுக்கு மாற்றாக அந்தப் பொறுப்பில் முன்னாள் நியூசிலாந்து வீரர் டானியல் விற்றோரி நியமிக்கப்பட்டுள்ளார்.

44 வயதான விற்றோரி, நியூசிலாந்து அணிக்காக 442 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார். இடது கை சுழற்பந்து வீச்சாளரான அவர், மொத்தமாக 705 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். 2008 முதல் 2012 வரையில் ஐ. பி. எல். கிரிக்கெட்டில் டில்லி மற்றும் பெங்களூர் அணிகளுக்காக விளையாடி உள்ளார்.

மேலும், 2014 முதல் 2018 வரையில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைமை பயிற்றுநராக செயல்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் ஆஸி, இங்கிலாந்து காலிறுதியில்!

பிரிஸ்பன், ஒக. 09

பிபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்ட தொட ரின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நைஜீரியாவை சம நிலை தவிர்ப்பு உதையில் 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது இங்கிலாந்து அணி.

மற்றோர் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 2-0 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கை வீழ்த்தி காலிறுதி சுற்றில் கால் பதித்தது.

பிரிஸ்பன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்கவில்லை. இதையடுத்து 30 நிமிடங்கள் கூடுத லாக வழங்கப்பட்டன. இதிலும், கோல்கள் அடிக்கப் படவில்லை. இதனால் வெற்றியை தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் இங்கிலாந்து 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.

87ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் நட்சத் திர வீராங்கனை லாரன் ஜேம்ஸூக்கு சிவப்பு அட்டை வழங்கப்பட்டது. இதனால் அந்த அணி 10 பேருடன் விளையாட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. எனி னும், நைஜீரியா அணியை கோல் அடிக்கவிடாமல் இங்கிலாந்து அணியின் தடுப்பு வீரர்கள் சிறப்பாக செயல்பட்டு வெற்றிக் கண்டது.



சிட்னியில் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 2-0 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கை வென்று காலிறுதி சுற்றில் கால் பதித்தது. அந்த அணி சார்பில் 29ஆவது நிமிடத்தில் கெய்ட்லின் போர்டும், 70ஆவது நிமிடத்தில் ஹேலி ராசோவும் கோல் அடித்து அசத்தினர். (ஐ)

# பாபர் அஸாம் அதிரடி சதம்; கொழும்பு இலகு வெற்றி!



கண்டி, ஒக. 09

காலி ரைட்டன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பாபர் அஸாம் குவித்த அபார சதத்தின் உதவியுடன் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி ஒரே ஒரு பந்து மீதமிருக்க 7 விக்கெட்களால் வெற்றிபெற்றது.

எல். பி. எல். ரி - 20 தொடரில் கண்டி பல்லேகலை சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் 10ஆவது போட்டி நடந்தது.

இப் போட்டியில் சதம் குவித்ததன் மூலம் இருபது 20 கிரிக்கெட்டில் 10 சதங்களை பாபர் அஸாம் பூர்த்தி செய்துள்ளார். இருபது 20 கிரிக்கெட்டில் கிறிஸ் கெயில் குவித்துள்ள 23 சதங்களுக்கு அடுத்ததாக 10 சதங்கள் குவித்த இரண்டாவது வீரரானார் பாபர் அஸாம்.

காலி ரைட்டன்ஸ் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 189 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் 19.5 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பதும் நிஷங்க, பாபர் அஸாம் ஆகிய இருவரும் 75 பந்துகளில் 111 ஓட்டங்களைப் பகிர்ந்து உறுதியான ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர்.

நிஷங்க 54 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்த பின்னர் களம் புகுந்து 8 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நுவனிது பெர்னாண்டோ 2ஆவது விக்கெட்டில் பாபர் அஸாமுடன் 55 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 166 ஓட்டங்களாக உயர்த்தினார்.

மறுபக்கத்தில் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய பாபர் அஸாம் 59 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 104 ஓட்டங்களைக் குவித்து கடைசி ஓவரின் முதல் பந்தில் ஆட்டம் இழந்தார்.

இதனை அடுத்து கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸின் வெற்றிக்கு கடைசி 5 பந்துகளில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்டன. மொஹமத் நவாஸ் 4 பந்துகளில் ஒரு சிக்ஸர் ஒரு பௌண்ட்ரி உட்பட ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களை விளாசி அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

பந்துவீச்சில் தப்ரெய்ஸ் ஷம்சி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய காலி ரைட்டன்ஸ் 20 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரிம் சீபேர்ட் 35 பந்துகளில் ஆட்டம் இழக்காமல் 54 ஓட்டங்களையும் ஷெவொன் டெனியல் 49 ஓட்டங்களையும் லசித் குரூஸ்புள்ளே 36 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ 30 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாகிஸ்தான் அணியின் தெரிவாளராக இன்சமாம்!

இஸ்லாமாபாத், ஒக. 09

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை தெரிவாளராக அந்த அணியின் முன்னாள் தலைவர் இன்சமாம்-உல்-ஹக் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பொறுப்பில் அவரை இரண்டாவது முறையாக நியமித்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

53 வயதான இன்சமாம் இதற்கு முன்பு கடந்த 2016 முதல் 2019 வரையில் பாகிஸ்தான் அணியின் தலைமைத் தெரிவாளராகப் பணியாற்றி இருந்தார். கடந்த வாரம் தெரிவாளர் பொறுப்பு குறித்து அவர் பேசி இருந்த நிலையில் தற்போது தலைமை தெரிவாளராகியுள்ளார். இந்தப் பொறுப்பைக் கவனித்து வந்த ஹாரூன் ரஷீத் கடந்த மாதம் விலகியிருந்தார்.



இன்சமாம், 1991 முதல் 2007 வரையில் பாகிஸ்தான் அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடியவர். மொத்தமாக 499 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 20,580 ஓட்டங்கள் குவித்துள்ளார். 35 சதங்கள் இதில் அடங்கும். 2003 முதல் 2007 வரையில் பாகிஸ்தான் அணியின் தலைவராக செயல்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஏமாற்றும் வெளிமாவட்ட வியாபாரிகள்

## காசோலை மோசடிச் சம்பவங்கள் அதிகரிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 09**

**வெளிமாவட்ட வியாபாரிகள், உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் காசோலை மோசடியில் ஈடுபட்டு வரும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும், இது தொடர்பில் உள்ளூர் உற்பத்தியாளர்களை விழிப்புடன் இருக்குமாறும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

யாழ். உற்பத்தியாளர்களை நாடி வரும் வெளிமாவட்ட வியாபாரிகள், அவர்களிடம் இருந்து உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து விட்டு பணத்துக்கு பதிலாக காசோலைகளை வழங்கிவிட்டுச் செல்வதாகவும், குறித்த காசோலையை உற்பத்தியாளர்கள் வங்கியில் வைப்பிலிடும் போது கணக்கில் பணம் இல்லை என வருவதாகவும், அதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயம் அறிந்து பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்கின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வகையில் யாழில் கடந்த 07 மாதங்களில் 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான காசோலை மோசடி தொடர்பில் 21 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அதில் 06 மோசடிச் சம்பவங்கள் தொடர்பில் 07 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் இது தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

அதேவேளை, 10 இலட்சம் ரூபாய்க்கு குறைவான மோசடிகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் பல முறைப்பாடுகள் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வலுவான பொருளாதாரத்தை இலங்கையால் அடையமுடியும்

## மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு, ஓக. 09

சர்வதேச நாணய நிதியம் முன்னறிவித்துள்ள 03 வீத சுருக்கத்தை விட வலுவான பொருளாதார செயற்பாட்டை இலங்கை அடைய முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார்துறையின் வட்டி வீதங்கள் மேலும் குறையவேண்டும் என கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் உண்மையான பொருளாதாரத்தின் மீது நிதிக் கொள்கையின் பரிமாற்றம் இது வரை சரியான முறையில் நடைமுறைப்படுத் தப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர், வீழ்ச்சியடைந்துள்ள பணவீக்க வீதத்திற்கு ஏற்ப கொள்கை வீதங்களை மேலும் தளர்த்துவதற்கான சந்தர்ப்பம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் முன்னறிவித்துள்ள 03 வீத சுருக்கத்தை விட வலுவான பொருளாதார செயற்பாட்டை இலங்கை அடைய முடியும் எனவும் அவர் கூறினார்.

பணவீக்கத்தை 4 முதல் 6 சத வீதம் வரையில் மட்டுப்படுத்துவதே மத்திய வங்கியின் இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கந்தானை இரசாயன தொழிற்சாலையில் தீ

## ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 09

கந்தானை பள்ளிய வீதியிலுள்ள தொழிற்சாலையொன்றில் பரவிய தீயில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரசாயன தொழிற்சாலையொன்றில் இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தொழிற்சாலையில் கணக்காளராக பணியாற்றிய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தீயணைப்பு நடவடிக்கையில் 02 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டதாக தீயணைப்பு சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, குறித்த இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயினால் வெளியான புகையை சுவாசித்ததன் காரணமாக ஏற்பட்ட சுவாசக் கோளாறினால் 40 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# காசோலை மோசடியில் ஈடுபட்டவர் யாழில் ஓராண்டுக்கு பின்னர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழில் ஓராண்டுக்கு முன்னர் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்துவிட்டு அதற்கான பணத்தினை கொடுக்காது தலைமறைவாகி இருந்த நபரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் இளவாலை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரிடம் 62 இலட்ச ரூபாய் பெறுமதியான வாகனம் ஒன்றை கொள்வனவு செய்து விட்டுப் பணத்துக்கு பதிலாகக் காசோலையொன்றைக் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து வாகனத்தினை விற்ற நபர், காசோலையை வங்கியில் வைப்பிலிட்டபோது, அந்தக் கணக்கில் பணம் இல்லை என காசோலை திரும்பியுள்ளது.

அதேவேளை, வாகனத்தை வாங்கிய நபர் வாகனத்தோடு தலைமறைவாகி இருந்த நிலையில் வாகனத்தை விற்றவர் இது தொடர்பில் யாழ்.மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காசோலை மோசடி செய்தவரை சுமார் ஓராண்டு கால பகுதிக்கு பின்னர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுத்த விசாரணைகளில் வாங்கிய வாகனம் மாவிட்டபுரம் பகுதியில் கடந்த 06 மாதங்களுக்கு முன்னர் மின்னொழுக்கு ஏற்பட்டு தீக்கிரையாகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# திருகோணமலை, தம்புள்ளை நகரங்களை மையப்படுத்தி சுற்றுலாத்துறை அபிவிருத்தி

கொழும்பு, ஓக. 09

திருகோணமலை மற்றும் தம்புள்ளை நகரங்களை மையமாகக் கொண்டு சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதன் கீழ், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுவதுடன், தனியார் முதலீட்டாளர்களும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஊக்குவிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வசதிகளின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் தொடர்பில் அந்த பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

திருகோணமலை நகரை மையமாகக் கொண்ட இத்திட்டத்தின் கீழ் மேலும் ஆறு உப திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதோடு திருகோணமலை நகர மையக் கரையோரம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தேவையான உட்கட்டமைப்புகள் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# மனைவியை சுட்டுக்கொன்ற கணவன் தானும் தற்கொலை

## நுவரெலியாவில் சம்பவம்

கொழும்பு, ஓக. 09

குடும்பத் தகராறு காரணமாக கணவன், மனைவியைச் சுட்டுக் கொன்றதுடன் அவரும் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவம் நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டோப்பாஸ் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் விசாரணையில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் கணவர் சுட்டது தெரியவந்துள்ளது.

நுவரெலியா, டோப்பாஸை வசிப்பிடமாகக் கொண்ட 28 மற்றும் 26 வயதுடைய தம்பதியினரே இந்தச் சம்பவத்தல் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

பம்பலப்பிட்டி துப்பாக்கிச்சூடு;

# கலால் வரி பரிசோதகர் உள்ளிட்ட நால்வர் கைது

கொழும்பு, ஓக. 09

பம்பலப்பிட்டியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜீப் வண்டி மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு வானொன்றில் தப்பிச்சென்ற போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தை பிரதேசத்தில் வாகனத்தை நிறுத்தி பொலிஸார் சோதனையிட்டபோதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஜீப் வண்டியிலிருந்த எவருக்கும் காயமேற்படவில்லை என பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் கலால் வரி பரிசோதகர் ஒருவரும் கலால் வரி அதிகாரிகள் மூவரும் அடங்குகின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட கலால்வரி பரிசோதகருக்குச் சொந்தமான துப்பாக்கி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# வாட்டி வதைக்கின்றது வறட்சி; குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 09

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் பேர் முறையான குடிதண்ணீரின்றி பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம், திருகோணமலை மற்றும் இரத்தினபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் பேர் முறையான குடிதண்ணீரின்றி பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் நாடு முழுவதும் உள்ள சுமார் 50 ஆயிரம் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அதேநேரம், வில்பத்து தேசிய பூங்காவில் உள்ள 106 சிறிய நீரோடைகளில் நீர் குறைவடைந்துள்ள நிலையில், விலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் உள்ள விலங்குகளுக்கு போதுமான நீர் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரதான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் பாரியளவில் குறைவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## குருந்தூர்...

தொடர்பில் வடக்கு மாகாண சபை யின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகர னால் வழக்கு தொடரப்பட்டது. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நடக்கும் இந்த வழக்கில் நகர்த்தல் பத்திரம் மூலமாக பொங்கல் விழா தடுக்கப்பட்டமை தொடர்பான விடயம் நேற்று விசார ணைக்கு எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் ரவிகரன் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி தனஞ்சயன் தெரிவிக்கையில்,

ஆதி ஐயனார் ஆலயத்தில் பொங்கல் விழாவை செய்ய முற்பட்டபோது, தொல்லியல் திணைக்களத்தாலும், சகோதர மொழி பேசுபவர்களாலும் தடுக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. இது தொடர்பாக நகர்த்தல் பத்திரம் ஊடாக அந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்கு நாங்கள் கொண்டுவந்தோம்.

அது தொடர்பாக பதிலளிப்பதற்காக தொல்லியல் திணைக்களத்துக்கு தவணை வழங்கப்பட்டிருந்தது.

தொல்லியல் திணைக்களம் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணி ஊடாக மன்றில் முற்பட்டார்கள்.

தாம் எந்தவிதத்திலும் அங்கே சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபட தடை செய்யவில்லை என்றும் எதிர்காலத்தில் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டோம் எனவும் தெரிவித்தனர்.

மேலதிக கட்டளைக்காக வழக்கு எதிர்வரும் 31.08.2023ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## 13ஐ...

கூட்டமைப்பு தனது பரிந்துரையை ஓர் ஆவணமாக நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

ஜனாதிபதி பணிமனையின் அதிகாரியான ஆஷூ மாரசிங்கவிடம் அந்த ஆவணத்தை புளொட் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

அந்தக் கடிதத்தில்,

"நாங்கள் ஐந்து அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டணியாக மேற்கூறியவை தொடர்பாக உங்கள் Ref PS/PCA/03-iii 2023 ஒகஸ்ட் 2ஆம் திகியிட்ட கடிதத்தை மேற்கோள் காட்டி எங்கள் கருத்துகளை முன்வைக்க விரும்புகிறோம்.

"ஏற்கனவே 1988 இல் பாராளுமன்றத்தில் 5/6 பெரும்பான்மையுடன் 13ஆம் திருத்தம் அரசமைப்பில் இணைக்கப்பட்டது, அன்றிலிருந்து நாடு முழுவதிலும் மாகாண சபைகள் நிறுவப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்தலை நடத்துவதற்காகக் கலைக்கப்படும் வரை செயல்பட்டன.

"எனவே ஏற்கனவே இருக்கின்றதானதும் அரசமைப்பின் ஒரு பகுதியாக இருப்பதையும் நடைமுறைப்படுத்துவதற்கு கருத்துகளை கோர வேண்டிய அவசியமில்லை. எவ்வாறாயினும், 13ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட சில மாகாண சபை அதிகாரங்கள் திட்டமிட்ட வகையில் காலத்துக்குக் காலம் அவ்வப்போது திரும்பப் பெறப்பட்டன.

"மாகாண சபைகளில் இருந்து மீளப் பெறப்பட்ட அந்த அதிகாரங்களை மீண்டும் வழங்கி, காணி, பொலிஸ், நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் 13ஆம் திருத்தத்தை அதன் அசல் வடிவில் நடைமுறைப்படுத்த நாங்கள் முன்மொழிகிறோம்" - என்றுள்ளது.

தற்போது, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற கட்சி பெயரில் இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ரெலோ, புளொட் கட்சிகளுடன் ஈ. பி. ஆர். எல். எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13இல்...

அலஸ் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சி விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாராளுமன்றத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்த சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு ரெலோ, புளொட் கட்சிக ளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## குடிதண்ணீர்...

தரமான போத்தல்களை பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களுக்கு போதுமான சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதை உறுதி செய்வது மிகவும் அவசியம் என்றும் அவர் மேலும் தெளிவுபடுத்தினார்.

## தீர்வுக்கான...

உள்ளன.

முதலில் அவர்கள் ஒன்றுபட வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் திறந்த மனதுடன் பேச அவர்கள் முன்வரவேண்டும். தீர்வு விடயத்தில் ஜனாதிபதி வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுகின்றார். அவர் மீது எவரும் குற்றம் சுமத்த முடியாது." - என்றார். (ஐ)

## 56மதகுருமார்...

தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

சிறைச்சாலைகளில் 48 பௌத்த தேரர்களும் 3 இந்து குருக்களும், 02 இஸ்லாமிய மௌலவிகளும் 02 கத்தோலிக்க மதகுருமார்களும் உள்ளனர்.

இவர்களில் 29 பௌத்த தேரர்கள், 3 இந்து குருமார்கள், 2 இஸ்லாமிய மௌலவிகள் கைதிகள் என்ற அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று, 19 பௌத்த தேரர்கள், ஒரு கத்தோலிக்க மதகுரு சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் 20 பௌத்த தேரர்களும் ஓர் இந்து குருக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பெண் வன்புணர்வு குற்றச்சாட்டில் குற்றச்சாட்டில் 3 பௌத்த தேரர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொலைக் குற்றச்சாட்டில் 2 பௌத்த தேரர்களும் ஓர் இந்து குருக்களும் உள்ளனர். ஒரு கத்தோலிக்க மத குரு சந்தேகத்தின் அடிப்படையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பண மோசடி குற்றச்சாட்டில் 2 தேரர்களும், ஓர் இந்து மதகுருக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 3 பௌத்த தேரர்கள் சிறையில் உள்ளனர். கொடூர பாலியல் குற்றச்சாட்டுடன் 2 பௌத்த தேரர்கள் சிறையில் உள்ளார்கள் - என்றார். (ஐ)

## கொக்குத்....

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுக்கு ஜனாதிபதி பணிமனையில் இருந்து நிதி கிடைக்க இருப்பதாக காணாமல் போனோர் பணிமனை தெரி வித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களத்தின் பிரதிநிதிகள் சேர்ந்து சந்தேகத்துக்கு இடமான (மனித புதைகுழி காணப்படும்) பிரதேசத்தை அளவிட்டு அதற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பின்னர் அகழ்வுப் பணிக்கான திகதி தீர்மானிக்கப்படவுள்ளது.

தொல்பொருள் திணைக்களம் முன்னிலையாகாத நிலையில் நாளை மறுதினம் (நாளை) புதைகுழி இடம் பார்வையிடப்படவுள்ளது. இதன் பின்னர், மூன்று வாரத்தில் பாதீட்டுக்கான மதிப்பீடு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று மன்றுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# சிவாஜிலிங்கமே இப்போதும் கட்சியின் பொதுச் செயலர்!

### கட்சித் தலைவர் சிறீகாந்தா அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 09

"தமிழ் தேசிய கட்சிக்குள் சில விவகாரங்கள் உள்ளமை உண்மை. ஆனால் அது கட்சிக்குள் பேசப்பட்ட - கட்சிக்குள் தீர்க்கப்படக்கூடிய விவகாரங்கள். சிவாஜிலிங்கமே தற்போதும் கட்சியின் செயலாளர். தேவையெனில் கட்சியின் தேசிய மாநாட்டில் அதில் மாற்றங்கள் வரலாம்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா.

தமிழ்த் தேசியக் கட்சியிலிருந்து அதன் பொதுச் செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்று முன்னர் தகவல்கள் பரவின. பரவிய சில மணி நேரங்களிலேயே அந்த விடயம் மறுக்கப்பட்டது. இந்த நிலையில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்தன் சிவாஜிலிங்கம் நீக்கப்பட்டது உண்மை என்று நேற்றைய தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திக் கூறினார். இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தாவிடம் தொடர்பு கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சிவாஜிலிங்கத்துக்கு மதிப்புக்குரிய கடந்தகால வரலாறுள்ளது. அவர் சொல்லும் ஒரு விடயத்தின் தர்க்கம் பற்றி கேள்வியெழுப்பலாம். ஆனால், அவரின் கட்சி விசுவாசம் பற்றி சந்தேகம் எழுப்ப முடியாது.

கட்சிக்குள் சில விவகாரங்கள் இருப்பது உண்மை. ஆனால், இந்த நிமிடம் வரை சிவாஜிலிங்கமே செயலாளர். நான் தான் தலைவர். கட்சியின் விவகாரங்கள் பற்றி ஏதாவது தகவலிருந்தால் இருவரில் ஒருவர் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம்" என்றார்.

"கட்சியின் தலைமைக்குழுவில் சில முறை கூடி சில விவகாரங்களை தீர்க்க முயன்றோம். அது கட்சிக்குள் நடக்கும் விவகாரம். அது பகிரங்கப்படுத்த வேண்டியதில்லை என்பதால் ஊடகங்களுக்கு வெளியிடவில்லை. இந்த விடயங்கள் கட்சிக்குள்ளேயே எம்மால் தீர்க்கப்படும் - என்று கூறியுள்ளார்.

# மலையக மக்களின் நடைபவனி கெக்கிராவையை அடைந்தது!



கொழும்பு, ஒக. 09

மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவு ஏற்பாடு செய்துள்ள தலைமன்னார் முதல் மாத்தளை வரையிலான நடைபவனி நேற்றைய தினம் கெக்கிராவையை சென்றடைந்துள்ளது.

திறப்பனை முதல் கெக்கிராவை வரை நேற்று நடைபவனி நடைபெற்றது. நடைபவனி வந்தவர்களை சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் சிறப்பாக வரவேற்றனர்.

கத்தோலிக்க குருமார்களும் ஆயரும் இணைந்து நடைபயணத்தை வரவேற்றனர். அத்துடன், பள்ளிவாசலில் மலையகம் 200 தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

கெக்கிராவை கலாசார நிலைய விரிவுரை மண்டபத்தில் சிரேஷ்ட பாடகர் ஜயதிலக பண்டாரவால் இசை நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்பட்டது. (ஐ)

## முட்டையின்...

எடுக்கும் என்பது தொடர்பில் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய அமைச்சுகளோடு நாம் பேச்சு நடத்தினோம். எனினும் அடுத்த வருடம் நடுப்பகுதி வரை அவ்வாறு முழுமையான தேவையை நிவர்த்தி செய்ய முடியாது என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாம் தற்போது சதொச மற்றும் ஏனைய வர்த்தக சந்தைகளில் 35 ரூபாய்க்கு முட்டையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் போது தேசிய உற்பத்தியாளர்களும் சிறு விலைக் குறைப்பை கடந்த வாரங்களில் மேற்கொண்டனர்.

65 ரூபாய் வரை சென்ற முட்டையின் விலை 50 ரூபாய் வரை குறைக்கப்பட்டது. சில இடங்களில் 44 ரூபாய்க்கும் முட்டை விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் ஒரு வாரமளவில் 38 ரூபாய் வரை அதன் சில்லறை விலை குறைவடையும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஐ)

# '13'குறித்து ஜனாதிபதி இன்று விசேட உரை!



கொழும்பு, ஒக. 09

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் இன்று புதன்கிழமை விசேட உரையாற்றவுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி அண்மையில் நடத்தியிருந்தார். கட்சிகளின் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஜனாதிபதி விசேட உரையாற்றவுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் மக்களின் பூர்வீக அடையாளங்களை அபகரிக்கும் வர்த்தமானிகளை மீளப்பெறுக!

## சிறீதரன் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்



கொழும்பு, ஓக. 09

**புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 188 இன் 16ஆம் பிரிவின் கீழ், வடக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களின் நான்கு பூர்வீக மதத்தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள 2023.02.01 ஆம் திகதிய 2317/57 ஆம் மற்றும் 2317/58 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவுறுத்தல்களை மீளப்பெறக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால், ஜனாதிபதிக்கும், துறைசார் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்கும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.**

2023.08.07 ஆம் திகதியிட்டு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் வதிவிடப் பிரதிநிதி, சர்வதேச நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், யுனெஸ்கோ மனித உரிமைகள் ஆணையகம் என்பவற்றுக்கு பிரதியிட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பறாளாய் முருகன் ஆலயம் உள்ளிட்ட குறித்த நான்கு இடங்களும் இன்றளவும் முறைசார் பூசை வழிபாடுகள் இயற்றப்படும் தமிழ் மக்களுடைய புராதன மதவழிபாட்டுத் தலங்களாகப் பேணப்பட்டு வரும் நிலையில், எமது மக்களை உணர்வு ரீதியான நெருக்கீடுகளுக்கு ஆளாக்கி இனத்துவ அடிப்படையிலான சிந்தனைகளைத் தூண்டும் நோக்கோடு மேற்படி மதத்தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தியுள்ளமை தமிழர்களது பூர்வீக நிலங்களை வலிந்து ஆக்கிரமிப்புச் செய்வதன் அதிஉச்சமான வெளிப்பாட்டு வடிவமாகவே தென்படுகிறது.

குறிப்பாக பறாளாய் முருகன் ஆலயப் பரிபாலன சபையினரிடமுள்ள 1786 ஆம் ஆண்டு எழுதப்பட்ட காணி உறுதியில் அவ் ஆலய வளாகத்தினுள் அரசமரம் இருப்பதாகக் குறித்துரைக்கப்பட்டிராத நிலையில், சூழலியல் நிபுணர்களின் கருத்துக்கமைய வெறுமனே 200 ஆண்டுகளுக்குட்பட்ட பழமையுடைய அவ் அரசமரத்தை, சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாக மகாவம்சம் கூறும் சங்கமித்தையின் வருகையோடு பொருத்திக் கூறுவதென்பது வரலாற்றுத்திரிபை ஏற்படுத்துவதாகவும், அப்பட்டமான பொய்மை நிறைந்த கருத்தாகவுமே அமைந்துள்ளது.

ஏற்கனவே, குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை முதல் உருத்திரபுரம் சிவன்கோவில், மயிலத்தமடு மாதவனை, கச்சல் சமளங்குளம் ஈறான நூற்றுக் கணக்கான இடங்கள் தொல்பொருள் எனும் போர்வையில் வலிந்து அபகரிக்கப்பட்டு, அவ்விடங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளும், துறவிமடங்களும், சிங்களக் குடியேற்றங்களும் திட்டமிட்டு நிறுவப்படும் சூழலில், தமிழர்களின் கலாசார மற்றும் மரபுரிமை அடையாளங்களின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாண மண்ணிலுள்ள ஆலயங்களையும் அவற்றின் சுற்றயல் பகுதிகளையும் புராதனச் சின்னங்களாக அடையாளப் படுத்தியிருப்பதை, அவ்விடங்களை முற்றாக பௌத்த மயமாக்கும் சிந்தனையின் ஆரம்ப வெளிப்பாடென்றே கருதமுடிகிறது.

போர்க்கால நெருக்கீடுகள், போரியல் வாழ்வின் இழப்புகள் என்பவற்றில் இருந்து இன்றளவும் மீண்டெழ முடியாத நிலையில், ஈடுசெய் நீதி கூட மறுக்கப்பட்டவர்களாக வாழும் ஈழத்தமிழர்களை, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினதும் அதன் கீழியங்கும் தொல்லியல் திணைக்களத்தினதும் அண்மைக்கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாக்குவதாகவே அமைந்துள்ளன.

ஓர் மதவாதச் சிந்தனையின்பாற்பட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இரு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்நிலைகளை மேலும் வலுப்படுத்தாது, தமிழர்களையும் இந்த நாட்டின் சகோதர இனத்தவர்களாகக் கருதி, அவர்களது வழிபாட்டுரிமைகளுக்கேனும் மதிப்பளிப்பதன் மூலம் இந்து மற்றும் கிறிஸ்தவ மதச் சின்னங்களையும், தமிழர்களது மரபார்ந்த அடையாளங்களையும் ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை நிரந்தரமாக நிறுத்த இந்த நாட்டின் தலைவராக தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அதற்கான நல்லெண்ணச் சமிக்ஞையாக 2023.02.01 ஆம் திகதிய 2317/57 ஆம் மற்றும் 2317/58 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களை மீளப்பெற துறைசார் அமைச்சரை அறிவுறுத்துமாறும் தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ)

# இன முறுகலை ஏற்படுத்த சபைக்குள் சிலர் முயற்சி!

## ஹறின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 09

இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்த பாராளுமன்றுக்குள்ளும் பலர் முயற்சித்து வருவதாக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லிணக்கம் இல்லாத காரணத்தினால்தான் நாடு பல பிரச்னைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

இதனால், ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து, பிரச்னைகளைத் தீர்க்க முயற்சி எடுத்து வருகிறார்.

ஆனால், இதற்கு சிலர் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவதில்லை. நாட்டில் 75 வருடங்களாக நீடிக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காணாமல், அதிகாரத்தை கைப்பற்றவே இவர்கள் முயல்கிறார்கள்.

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தபோது கூட, பாராளுமன்றில் ஒன்றாக செயற்பட முடியாத நிலைமை தான் காணப்படுகிறது.

இரண்டு இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்த பாராளுமன்றுக்குள்ளும் பலர் இன்று முயற்சித்து வருகிறார்கள். 13 இன் ஊடாக அதிகாரங்களை வழங்கினால், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கூறுகிறார்கள். ஆனால், காணி அதிகாரம் ஜனாதிபதியிடம் மட்டும்தான் உள்ளது.

இதில் ஒரு பகுதி காணி அமைச்சுக்கும் இன்னொரு பகுதி காணி ஆணையாளர் நாயகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் நிர்வாக நடவடிக்கைகள் அனைத் தும், பிரதேச செயலகத்திற்கு தான் உள்ளது.

எனவே, நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும்.

75 வருடங்களாக தோல்வியடைந்துவிட்டோம். அடுத்த 25 வருடங்களிலேனும் ஒன்றாக பயணித்து வெற்றி காண்போம் - என்றார். (அ)

# பிக்கு கைது!

கொழும்பு, ஓக. 09

நவகமுவ, பொமிரிய ரஸ்ஸபான பிரதேசத்தில் விஹாரைக்கு சொந்தமானது எனக் கூறப்படும் வீட்டை நடத்தி வந்த பல்லேகம சுமண என்ற பிக்கு நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசத்தில் சில பெண்களுடன் தகாத செயல்களில் ஈடுபட்டதாக பிரதேசவாசிகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் பிக்குவை அழைத்துச் சாட்சியங்களை பதிவு செய்த பின்னர் கைது செய்ததாக பொலிஸார் கூறினர்.

இந்த பிக்கு, தாய், மகள் எனக் கூறப்படும் இரண்டு பெண்களுடன் அந்த அறையில் இருந்த வேளையில், பிரதேசவாசிகளால் சுற்றிவளைக்கப்பட்டார் அதன்பின்னர் மூவர் மீதும் அங்கிருந்தவர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதன்பின்னர், அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்ஸுக்கு கல்லெறிந்து சேதமாக்கிய பெண் கைது

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாணத்தில் பஸ்ஸுக்கு கல்லெறிந்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - அச்சுவேலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் தரித்து நின்றுள்ளது.

இதன்போது அங்கு நின்ற பெண்ணொருவர் பஸ் மீது கல் வீசி தாக்கி சேதப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்துள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பி.ரி-06 ரக விமானங்கள் இயக்குவதை இடைநிறுத்திய இலங்கை விமானப்படை

கொழும்பு, ஓக. 09

திருகோணமலை சீனன்குடாவில் நேற்று இடம்பெற்ற பயிற்சி விமான விபத்தை அடுத்து, பி.ரி-06 ரக அனைத்து விமானங்களையும் இயக்குவதை இலங்கை விமானப் படை இடைநிறுத்தியுள்ளது.

விபத்து தொடர்பில், விமானப் படைத் தளபதி எயார் மார்ஸல் உதேனி ராஜபக்‌ஷவினால் விசேட விசாரணைக்குழுவொன்று நேற்று முன் தினம் நியமிக்கப்பட்டதுடன், அந்த குழுவின் அறிக்கை கிடைக்கப் பெறும் வரையில், அந்த விமானங்கள் இடைநிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படையின், பி.ரி-06 ரக பயிற்சி விமானம் நேற்றுமுன்தினம் காலை புறப்பட்ட சில நிமிடங்களில் சீனன்குடா விமானப்படையின் கல்லூரி மைதானத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் தயாரிப்பான பி.ரி-06 ரக பயிற்சி விமானங்களில் 6 விமானங்களை இலங்கை விமானப்படை 2018 ஆம் ஆண்டு கொள்வனவு செய்வதற்கு இலங்கை தேசிய பாதுகாப்புள சபை அனுமதி வழங்கியது.

இதற்காக 5 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான நிதி செலவிடப்பட்டது.

2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் குறித்த விமானம் ஒன்று விபத்துக்குள்ளான நிலையில், ஒருவர் உயிரிழந்தார். (அ)

# இந்திய மீனவர்கள் 9 பேர் நிபந்தனையுடன் விடுதலை!

யாழ்ப்பாணம், ஓக. 09

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கடந்த மாதம் 25ஆம் திகதி கைது செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை சேர்ந்த 9 மீனவர்கள் நேற்று நிபந்தனையுடன் கூடிய பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களை இரண்டு படகுடன் கைது செய்த இலங்கை கடற்படையினர் யாழ். மாவட்ட நீரியல்வளத் துறையினரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இந்நிலையில் மீனவர்களின் வழக்கு நேற்று ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்து நீதிபதி ஜே.கஜநிதிபாலன் மீனவர்கள் 9 பேரையும் நிபந்தனையுடன் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

மூன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நீரியல் வளத்துறை அதிகாரிகளால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஆறு மாதப்படி 18 மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதனை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

மீனவர்களின் இரண்டு படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 18ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுக்கொள்ளப்படவுள்ளது.

அன்றைய நாளில் படகின் உரிமையாளர்கள் மன்றில் ஆதாரங்களுடன் முன்னிலையாகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.